
சுவடி : 43
ஏடு : 8
பிப்ரவரி 2019
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

ஆசிரியவுரை

# இந்தியா முழுவதிலும் மேல்சாதியினருக்கு 10% இடஒதுக்கீடு! தமிழ்நாட்டில் மொத்த இடஒதுக்கீடு 79% ஆகும் வடமாநிலங்களில் 59.5% ஒதுக்கீடு ஆகும் ஒருபோதும் பிற்படுத்தப்பட்டோருக்கு விகிதாசார ஒதுக்கீடு வராது! வராது!



பிரதமர் நரேந்திர மோடி அரசு, மக்கள் தொகையில் ஏறக்குறைய 17.5 விழுக்காடு உள்ள உயர் சாதி மக்களில் நலிந்த பிரிவுகளின் மக்களுக்கு மய்ய மாநில அரசுகளின் கல்வியிலும் உதவி பெறும் மற்றும் உதவி பெறாத தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வியிலும், மய்ய மாநில அரசுகளின் வேலைகளிலும் 10 விழுக்காடு இடங்களை ஒதுக்கீடு செய்து அதற்கு ஏற்ற வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி விதி 15இல் 6ஆவது உட்பிரிவையும் விதி 16இல் 6வது உட்பிரிவையும் சேர்த்துள்ளது. அவை 19.1.2019 முதல் நடப்புக்கும் வந்துவிட்டன. அவற்றின் தமிழாக்கம் பின்வருமாறு:

**பிரிவு 15 (6)**

(அ) உட்பிரிவு (4) மற்றும் (5)இல் குறிப்பிடப்பட்டுள்ள வகுப்புகள் அல்லாமல் பொருளாதாரத்தில் நலிந்துள்ள எந்தப் பிரிவுகளின் குடிமக்களை முன்னேற்றுவதற்காகவும் செய்யப்படுகின்ற எந்தச் சிறப்பு ஏற்பாட்டையும் செய்வதிலிருந்து,

(ஆ) உட்பிரிவு (4) மற்றும் (5) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வகுப்புகள் அல்லாமல் பொருளாதாரத்தில் நலிந்துள்ள எந்தப் பிரிவுகளின் குடிமக்களை முன்னேற்றுவதற்காகவும் செய்யப்படுகின்ற அத்தகைய சிறப்பு ஏற்பாடுகளைப் பொறுத்தமட்டில் அவை பிரிவு 30 உட்பிரிவு (1)இல் உள்ள சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்கள் அல்லாத, அரசால் உதவி செய்யப்படும் அல்லது உதவி செய்யப்படாத தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களின் சேர்க்கையுடன் தொடர்புடையதாகும் நிலையில் நடப்பில் உள்ள இட ஒதுக்கீட்டுக்கும் கூடுதலாக மற்றும் ஒவ்வொரு நிலையிலும் உள்ள மொத்த இடங்களில் உச்ச அளவாக 10 விழுக்காடு இடங்களின் இடஒதுக்கீட்டுக்கான எந்தச் சிறப்பு ஏற்பாட்டையும் செய்வதிலிருந்து, இந்தப் பிரிவில் உள்ள எதுவும் அல்லது பிரிவு 19 உட்பிரிவு (1) (g) அல்லது பிரிவு 29 உட்பிரிவு (2) ஆகியவற்றில் உள்ள எதுவும் அரசைத் தடுக்காது.

விளக்கம்: இந்தப் பிரிவு மற்றும் பிரிவு 16 ஆகியவற்றுக்காக பொருளாதாரத்தில் நலிந்த பிரிவுகள் என்பது குடும்ப வருமானம் மற்றும் பொருளாதாரக் குறைவுகளுக்கான குறியீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றவை ஆகும்.

**பிரிவு 16(6)**

நடப்பில் உள்ள இடஒதுக்கீட்டுக்கும் கூடுதலாக ஒவ்வொரு நிலைப் பதவிகளிலும் உச்ச அளவாக 10 விழுக்காடு இடங்களை உட்பிரிவு (4)இல் குறிப்பிடப்பட்டுள்ள வகுப்புகள் அல்லாமல் பொருளாதாரத்தில் நலிந்துள்ள எந்தப் பிரிவுகளின் குடிமக்களுக்கும் சாதகமாக நியமனங்களிலோ பதவிகளிலோ இடஒதுக்கீட்டுக்கு எந்த ஏற்பாட்டையும் செய்வதிலிருந்து அரசை இந்தப் பிரிவில் உள்ள எதுவும் தடுக்காது.

பிரதமர் நரேந்திரமோடி அரசின் இந்தச் செயல் உயர் சாதிகளின் ஆதிக்கம் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கும், மேலும் வேகமாக அதிகரிப்பதற்கும் வழிசெய்துவிட்டது. அதே வேளையில் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடி மக்கள் தங்களுக்குரிய விகிதாசாரப் பங்கைப் பெறுவதைத் தடுப்பதற்கும் தாமதப்படுத்துவதற்கும் அடி கோலிவிட்டது.

இனி இந்த சட்டத்திருத்தத்துக்கான வரலாற்றுப் பின்னணி என்ன என்பதைப் பார்ப்போம்.

1801ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இந்தியா என்ற ஒரு நிலப்பகுதி பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தது.மனுஸ்மிருதி காலந்தொட்டு சூத்திரர்களுக்கும் ஆதி சூத்திரர்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டு வந்தது. அந்தக் கல்வியை பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் 1835ஆம் ஆண்டில் எல்லா மக்களுக்கும் பாகுபாடு காட்டாமல் அளித்தது.அப்போது வடநாட்டில் காயஸ்தர்களும் தென்னாட்டில் கார்காத்த வேளாளர்களும் இந்தியா முழுவதும் பார்ப்பனர்களும் கல்வி பெற்றிருந்தினர். எனவே அவர்களே அரசு வேலைகளில் ஆதிக்கம் பெற்றிருந்தனர். இதைக் கண்டு தென்னாட்டுப் பார்ப்பனரல்லாதார் சிலர் பிரிட்டிஷ் அரசிடம் முறையிட்டு அரசின் வேலைகளைப் பார்ப்பனரல்லாத எல்லா வகுப்பு மக்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்குமாறு கோரினர்.

சென்னை மாகாணத்தில் பிரிட்டிஷ் அரசு 1840ஆம் ஆண்டில் ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணையில் குறிப்பிட்ட சாதிக்காரரே அரசு வேலைகளில் இடம் பெறாமல் எல்லாச் சாதிக்காரர்களும் இடம் பெறுமாறு அரசு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 1912ஆம் ஆண்டில் சென்னையில் வருவாய் வாரியத்திலும் பிற அலுவலகங்களிலும் பணியாற்றிய அதிகாரிகள் ஒன்றுகூடி திராவிடர் சங்கம் தொடங்கி அரசின் வேலைகளில் பங்கு கோரினர். சென்னையில் சி.நடேச முதலியார் 1916ஆம் ஆண்டில் டாக்டர் டி.எம்.நாயர், சர்.பிட்டி தியாகராயச் செட்டியார் ஆகியோரை இணைத்துக் கொண்டு தென்னிந்திய நல உரிமைச்சங்கம் என்கிற அமைப்பைத் தொடங்கினார். அந்த அமைப்பு அரசின் வேலைகளில் எல்லா வகுப்புகளுக்கும் விகிதாசாரப் பங்கு கோரும் அறிக்கையினை வெளியிட்டது. அந்த அறிக்கை பார்ப்பனரல்லாதார் அறிக்கை (Non-Brahmin Manifesto) என்று அழைக்கப்பட்டது.

அந்த அமைப்பின் சார்பில் டாக்டர் டி.எம்.நாயர் இலண்டன் சென்று எல்லாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கண்டு பேசி சென்னை மாகாண சட்டப்பேரவையில் பார்ப்பனரல்லாதாருக்கு என்று தனித் தொகுதிகள் ஒதுக்கித் தருமாறு கோரிக்கை வைத்தார். பிரிட்டிஷ் அரசு அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு 1919ஆம் ஆண்டில் அதற்கெனச் சட்டம் இயற்றியது.

அந்தச் சட்டத்தின் கீழ் 1920ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டப்பேரவைக்குத் தேர்தல் நடைபெற்றது. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைத்தது.முதலாவது நடவடிக்கையாக அந்த அரசு பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைக் குறைக்கின்ற நடவடிக்கையை எடுத்தது. ஏற்கெனவே 1840ஆம் ஆண்டில் வருவாய் வாரியம் வேலை நியமனத்துக்குப் பிறப்பித்திருந்த ஆணையை எல்லாத் துறைகளுக்கும் விரிவுபடுத்தி ஆணை பிறப்பித்தது. இவ்வாறு 1921ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையே முதலாவது வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ ஆணை என்றழைக்கப்பட்டது. பார்ப்பனர்களும் ஆங்கில ஏடு "இந்து"வும் தமிழ் ஏடு "சுதேச மித்திரனும்" அந்த ஆணையை எதிர்த்தனர். அரசு அந்த ஆணையை 1927ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

சென்னை மாகாண அரசின் பத்திரப் பதிவுத்துறை அமைச்சராக இருந்த எஸ்.முத்தையா முதலியார் 1928இல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஆணையை முதலாவதாக நடைமுறைப்படுத்தினார். சமுதாயத்தை ஐந்து வகுப்புகளாகப் பிரித்து மொத்த இடங்கள் 12 எனக்கொண்டு, அதில் பார்ப்பனரல்லாதாருக்கு 5 இடங்களும் பார்ப்பனருக்கு 2 இடங்களும் ஆங்கிலோ இந்தியருக்கும் கிறித்தவருக்கும் 2 இடங்களும் முகமதியருக்கு 2 இடங்களும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 1 இடமும் எனப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது.

இந்தப் பங்கீடு நடப்புக்கு வந்த பின்னர் பார்ப்பனரல்லாதார் பிரிவில் எல்லா இடங்களையும் கார்காத்த வேளாளர், தொண்டை மண்டல சைவ வேளாளர், தெலுங்கு பேசும் ரெட்டியார், தெலுங்கு பேசும் நாயுடு, கருணீகர் ஆகிய ஐந்து வகுப்பு மக்களுமே பெற்றுக் கொண்டனர் என்பதை அறிந்த பெரியார் ஈ.வெ.ரா, 1934இல் அரசுக்கு ஒரு கோரிக்கை வைத்தார். அதில் பார்ப்பனரல்லாதார் என்கிற பிரிவில் பிற்படுத்தப்பட்டவர்கள் என்னும் உட்பிரிவை ஏற்படுத்துமாறு கோரினார்.

காங்கிரசுக் கட்சி அரசின் முதலமைச்சர் ஓமந்தூர் பி.இராமசாமி ரெட்டியார் 1947 நவம்பரில் பார்ப்பனரல்லாத இந்துப் பிற்படுத்தப்பட்டவர் என்னும் பிரிவை இந்தியாவிலேயே முதன்முறையாக உண்டாக்கினார். அவர் சமுதாயத்தை 6 வகுப்புகளாகப் பிரித்து, மொத்த இடங்கள் 14 எனக்கொண்டு அதில் பார்ப்பனரல்லாத மேல்சாதி இந்துக்களுக்கு 6 இடங்களும் பார்ப்பனரல்லாத இந்துப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 2 இடங்களும் பார்ப்பனருக்கு 2 இடங்களும் ஆதித்திராவிடருக்கு 2 இடங்களும் ஆங்கிலோ இந்தியரும் இந்தியக் கிறித்தவருக்கு ஒரு இடமும் முசுலீம்களுக்கு ஒரு இடமும் எனப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது.

இந்திய அரசமைப்புச் சட்டம் 26.1.1950இல் நடப்புக்கு வந்தது. 1947இல் ஓமந்தூரார் பிறப்பித்து நடப்பில் இருந்த கல்வியில் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவ ஆணையை எதிர்த்து வழக்குத் தொடுக்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் அந்த ஆணை செல்லாது என்று கூறியது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து பெரியார் ஈ.வெ.ரா. போராடினார். அதன் காரணமாக பிரதமர் நேரு இந்திய அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தி விதி 15இல் உட்பிரிவு (4)ஐச் சேர்த்தார். அதன் காரணமாக, கல்வியிலும், சமுதாயத்திலும் பிற்படுத் தப்பட்டோர், பட்டியல்

வகுப்பினர், பழங்குடியினர் ஆகிய மூன்று பிரிவினருக்கும் கல்வியில் இட ஒதுக்கீட்டுக்கு வழி செய்யப்பட்டது. விதி 15(4)இன்படி கல்வியிலும் விதி 16(4) இன்படி வேலையிலும் 27.9.1951இல் பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு 15 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு 25 விழுக் காடும் பொதுப் போட்டிக்கு 60 விழுக்காடும் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. காமராசர் 13.4.1954இல் முதலமைச்சர் பொறுப்பேற்றார். அவர் 30.4.1954 இல் பட்டியல் வகுப்பின ருக்கும் பழங்குடி யினருக்குமான ஒதுக்கீட்டை 15 விழுக்காட்டி லிருந்து விகிதாசார அளவாக 16 விழுக்காடாக உயர்த்தினார். இதனால் பொதுப் போட்டிக்குரிய 60 விழுக்காடு 59 விழுக் காடாகக் குறைந்து விட்டது.

முதலமைச்சர் மு.கருணாநிதி 7.6.1971இல் சட்டநாதன் குழுவின் பரிந்துரையை ஏற்று, பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 25 விழுக்காட்டிலிருந்து 31 விழுக்காடாக உயர்த்தினார்; பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கு மான இடஒதுக்கீட்டை 16 விழுக்காட்டிலிருந்து விகிதாசார அளவாக 18 விழுக்காடாக உயர்த்தினார்.இதனால் பொதுப் போட்டிக்குரிய இடங்கள் 59 விழுக்காட்டிலிருந்து 51 விழுக் காடாகக் குறைந்துவிட்டது.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். **பிற்படுத்தப்பட்ட மக்களுக் கான இடஒதுக்கீட்டுக்கு,** 2.7.1979இல் ரூ.9ஆயிரம் ஆண்டு வருமான வரம்பினை அறிவித்து அரசாணை வெளியிட்டார். அனைத்து அரசியல் கட்சிகளும் சமுதாய அமைப்புகளும் அரசு அலுவலர் அமைப்புகளும் இதை எதிர்த்துப் போராடின. போராடிய அனைவரின் கோரிக்கையும் வருமான வரம்பு அரசாணை நீக்கப்பட வேண்டும் என்பது மட்டுமே. வே.ஆனைமுத்து தலைமையிலான மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையும் வருமான வரம்பு ஆணை நீக்கப்பட வேண்டும் என்று கோரியதுடன் நில்லாமல், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டினை 31 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்று 19.8.1979இல் அரசுக்குக் கோரிக்கை மனு அளித்தது. அவர், அமைச்சர் பண்ருட்டி ச.இராமச்சந்திரன் மூலமாக 7.10.1979இல் முதல்வர் எம்.ஜி.ஆருக்குப் புரிய வைத்தார். அப்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்தது. முதல்வர் எம்.ஜி.ஆர். மறுசிந்தனை செய்தார்; 1.2.1980இல் வருமான வரம்பு ஆணையை இரத்துச் செய்ததுடன், பிற்படுத்தப்பட்ட மக்களுக் கான இடஒதுக்கீட்டை 50 விழுக்காடாக உயர்த்தி ஆணை யிட்டார். அதனால் பொதுப் போட்டிக்குரிய இடங்கள் 51 விழுக்காட்டிலிருந்து 32 விழுக்காடாகக் குறைந்தது.

முதலமைச்சர் மு.கருணாநிதி மருத்துவர் ச.இராமதாசின் கோரிக்கையை ஏற்று 28.3.1989இல் 50 விழுக்காடு உடைய பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலைப் பிற்படுத் தப்பட்ட வகுப்புகள் என்றும், மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் என்றும் இரண்டாகப் பிரித்து முறையே 30 விழுக்காடு என்றும் 20 விழுக்காடு என்றும் ஒதுக்கீடு அளித்து ஆணை யிட்டார். அத்துடன், பட்டியல் பழங்குடி வகுப்புக்கென்று தனியாக ஒரு விழுக்காடு ஒதுக்கீடு அளித்தார். பட்டியல் வகுப்புக்கான 18 விழுக்காடு அப்படியே தொடர்ந்தது. பொதுப்போட்டிக்குரிய 32 விழுக்காடு 31ஆகக் குறைந்தது.

முதலமைச்சர் மு.கருணாநிதி 2008ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கான 30 விழுக்காட்டில் முசுலீம் களுக்கு 3.5 விழுக்காடும், பட்டியல் வகுப்புகளுக்கான 18 விழுக்காட்டிலிருந்து அருந்ததியர் வகுப்புக்கு 3 விழுக்காடும் உள்ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்.

மய்ய அரசின் பணிகளில் பட்டியல் வகுப்புக்கு மட்டும் 1943இல் பிரிட்டிஷ் அரசு 8 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்தது; பின் அது 1946இல் 12.5 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. அரசமைப்புச்சட்டம் நடப்புக்கு வந்த பிறகு அது, தொடர்ந்து பின்னர் 15 விழுக்காடாக உயர்த்தப்பட்டு தொடர்ந்து வருகிறது. பட்டியல் பழங்குடியினருக்கு 1951இல் முதன்முதலாக 5 விழுக்காடு அளிக்கப்பட்டு அது பின்னர் 7.5 விழுக்காடாக உயர்த்தப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**1978ஆம் ஆண்டு வரை மய்ய அரசின் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு இடஒதுக்கீடு வழங்கப் படவே இல்லை. மேலும் வட இந்திய மாநிலங்கள் எதிலும் கல்வியிலும் வேலையிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்கப்படவில்லை. வே.ஆனைமுத்து வின் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் ஒடுக்கப்பட்டோர் பேரவையின் ஒட்டு மொத்தமான வேலைத் திட்டத்துடன் மேற்கொண்ட தொடர்ந்த செயல் பாட்டின் காரண மாக மண்டல் குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் அரசியல் கட்சிகளும் சமூக நீதி அமைப்புகளும் சமுதாய அமைப்புகளும் களத்தில் இறங்கிச் செயல்பட்டதன் காரணமாகவும் நாடாளு மன்ற மேலவையில் 1986 முதல் 1992 வரையில் உறுப்பினராக இருந்த ஒடுக்கப்பட்டோர் பேரவையின் தலைவர் ராம் அவதேஷ் சிங்கின் நடவடிக்கைகள் பிரதமர் வி.பி.சிங் கவனத்தை ஈர்த்ததாலும், பிரதமர் வி.பி.சிங் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மய்ய அரசில் வேலையில் மட்டும் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்தார். 2007இல் பிரதமர் மன்மோகன் சிங் மய்ய அரசின் கல்வியில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்தார்.**

மய்ய அரசின் பணிகளில் முதல்நிலைப் பணிகளில் உள்ள அலுவலர்களின் 1980ஆம் ஆண்டுக்குரிய வகுப்பு வாரியான புள்ளி விவரம் மண்டல் குழு அறிக்கையில் தரப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டுக்குரிய அத்தகைய புள்ளி விவரம் மய்ய அரசின் பணியமர்த்தம் மற்றும் பயிற்சித் துறையின் இணை அமைச்சர் 18.11.2008ஆம் நாள் நாடாளுமன்றத்துக்கு அளித்த விடையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. எண்ணிக்கைக் கணக்கில் தரப்பட்டுள்ள அந்தப் புள்ளி விவரம் விழுக்காடாக மாற்றப்பட்டு இங்கே தரப்படுகிறது. மய்ய அரசின் முதல்நிலைப் பணிகளின் வகுப்புவாரியான பிரதிநிதித்துவத்தை இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்வோம்.

இந்திய மக்கள் தொகையில் 2011ஆம் ஆண்டில் உயர் வகுப்பினர் ஏறக்குறைய 17.5 விழுக்காடு உள்ளனர்.எல்லா மதங்களையும் சார்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 57 விழுக்காடும், பட்டியல் வகுப்பினரும் பழங்குடியினரும் 25.5 விழுக்காடும் உள்ளனர்.

உயர் சாதியினர் 1980ஆம் ஆண்டில் பெற்றிருந்த 89.6 விழுக்காடு இடங்கள் 2008 ஆம் ஆண்டில் 77.2 விழுக்காடாகக் குறைந்துள்ளது.அதாவது ஆதிக்கம் 12.4 விழுக்காடு சரிந்துவிட்டது.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 1980ஆம் ஆண்டில் பெற்றிருந்த 4.7 விழுக்காடு இடங்கள் 2008 ஆம் ஆண்டில் 5.4 விழுக்காடாக உயர்ந்துள்ளது. அதாவது உயர்சாதியினர் வெறும் 0.7 விழுக்காடு அதிகரித்துள்ளது.

பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடிகள் 1980ஆம் ஆண்டில் பெற்றிருந்த 5.7 விழுக்காடு இடங்கள் 2008ஆம் ஆண்டில் 17.4 விழுக்காடாக உயர்ந்துள்ளது. அதாவது 11.7 விழுக்காடு அதிகரித்துள்ளது.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையும் 1978ஆம் ஆண்டில் தொடங்கித் தொடர்ந்து செய்து வந்த அனைத்திந்திய அளவிலான தொடர் பரப்புரைப் பணிகளினாலும் கிளர்ச்சி களினாலும் மண்டல் குழு அறிக்கை நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட்ட பின்னர், சமூக அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் காட்டிய ஈடுபாட்டினாலும், 1990இல் பிரதமர் வி.பி.சிங், மண்டல் குழு பரிந்துரைத்தபடி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மய்ய அரசின் பணிகளில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்து அரசாணை பிறப்பித்ததனாலும் 6.8.1990 முதல் சமூக நீதிக்கு நாடு தழுவிய அளவில் கிடைத்த செல்வாக்கினாலும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் மனஎழுச்சி பெற்றனர். அதன் காரணமாக அவர்கள் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வது பெருகியது; வெற்றி பெறுவதன் விகிதம் கூடியது. அதனால் முதல் நிலைப் பணிகளில் உயர்சாதி யினரின் ஆதிக்கம் பிரதிநிதித்துவம் 12.4 விழுக்காடு சரிந்து விட்டது.

தங்களுடைய ஆதிக்கம் சரிவதைத் தெரிந்து கொண்ட உயர் சாதியினர் இடஒதுக்கீட்டை எதிர்ப்பதால் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்டனர்; தங்களையும் பிற்படுத்தப் பட்ட வகுப்புகளின் பட்டியலில் சேர்க்கக் கோரினர்.

2014 மே மாதம் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அன்றைய பிரதமர் மன் மோகன் சிங் தலைமையிலான காங்கிரசுக் கட்சி அரசு, வட இந்தியாவில் பீகார், குசராத், அரியானா, இமாசலப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், புதுதில்லி, இராசஸ்தான் (பரத்பூர் தோல்பூர் மாவட்டங்கள் மட்டும்), உத்தரப்பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ஜாட் சமூகத்தினரை மய்ய அரசின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலில் 4.3.2014ஆம் நாள் சேர்த்தது. இதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் 17.3.2015ஆம் நாள் தீர்ப்பு கூறியது. ஜாட் சாதியை இதர பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தது செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

ஜாட் சமூகத்தினரைத் தொடர்ந்து குசராத்தில் பட்டீதார் சமூகத்தினரும், மகாராட்டிய மாநிலத்தில் மராத்தா சமூகத்தினரும் தங்களைப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலில் சேர்க்கக் கோரி வலிமையான போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

**இந்தச் சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன் மொழிந்த சமூக நீதி மற்றும் அதிகாரப்படுத் துதல் துறை அமைச்சர் இந்தத் திருத்தத்துக்கான நோக் கங்களும் காரணங்களும் என்ன என்பதை விளக்கினார். அதில் அவர் அரசமைப்புச் சட்டத்தில் உள்ள வழிகாட்டுதல் நெறிப்பகுதி, பிரிவு 46இல் கூறப்பட்டுள்ளதற்கேற்ப அரசு இந்தத் திருத்தத்தை முன்மொழிகிறது என்று கூறியுள்ளார்.**

**பிரிவு 46இல் சமூக அநீதிக்கும் எல்லா வகையான சுரண்டலுக்கும் ஆளாக்கப்படுகின்ற நலிவுற்ற பிரிவு மக்களுக்கும் பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடி மக்களுக்கும் பாதுகாப்பு அளித்திடவும் அவர்களுடைய கல்வி மற்றும் பொருளாதார நலன்களின் மேம் பாட்டுக்காகவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள லாம் என்று சொல்லப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் என்றோ, உயர் சாதியில் உள்ள பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் என்றோ சொல் லப்படவில்லை. ஆனால் உயர்சாதி ஏழை மக்கள் என்றுமே சமூக அநீதிக்கு ஆளாக்கப்படாத நிலையிலும் எந்த வகையான சுரண்டலுக்கும் ஆளாக் கப்படாத நிலையிலும் அரசு இந்தச் சட்டத்திருத்தத்தை அவர் களுக்காக நிறைவேற்றியுள்ளது. இது அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது ஆகும்.**

2014ஆம் ஆண்டின் மே மாதப் பொதுத்தேர்தலைக் குறிவைத்து காங்கிரசு அரசு அந்த ஆண்டின் மார்ச்சு மாதம் ஜாட் சமூகத்தை மட்டும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலில் சேர்த்து இடஒதுக்கீடு வழங்கிய அந்த நடை முறையைப் பின்பற்றியே, பா.ஜ.க. அரசும், 2019 மே மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் குறிவைத்து எல்லா உயர்சாதி ஏழைகளுக்கும் இடஒதுக்கீடு அளித்து இப்போது, அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தியுள்ளது. இது உள்நோக்கம் கொண்டது. இது பா.ச.க. வெற்றிக்கு ஓரளவு உதவக்கூடும் என நாம் கருதுகிறோம். பா.ச.க.வின் இந்தச் சூழ்ச்சியான நடவடிக்கையை நாம் முறியடிக்க வேண்டும். பா.ஜ.க அரசின் இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் மய்ய அரசின் பணிகளில் உயர் சாதியினர் பெற்றுள்ள பிரதிநிதித் துவம் மேலும் 10 விழுக்காடு கூடிவிடும். அதாவது 2008 ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி மய்ய அரசின் உயர்நிலைப் பணிகளில் உயர்சாதியினர் பெற்றுள்ள 77.2 விழுக்காடு இடங்கள் மேலும் 10 விழுக்காடு அளவுக்குக் கூடிவிடும்; அதாவது 87.2 விழுக்காடாக உயர்ந்து விடும்; உயர் சாதியினரின் ஆதிக்கம் நிலைக்க வைக்கப்பட்டுவிடும். இந்த

ஆதிக்கம் சமுதாயம், அரசியல், பொருளியல், கல்வி, வணிகம், தொழில் என அனைத்துத் தளங்களிலும் உயர் சாதியினர் ஆதிக்கம் பெற வழிவகுத்துவிடும். அந்த அளவுக்குப் பிற்படுத் தப்பட்ட, பட்டியல் வகுப்பு, பழங்குடி மக்களின் பங்கு குறைந்து விடும்; இவ்வகுப்புகளின் முன்னேற்றம் தடுக்கப்பட்டுவிடும்.

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 27 விழுக்காடு, பட்டியல் வகுப்பினர் 15 விழுக்காடு, பழங்குடியினர் 7.5 விழுக்காடு என இம்மூன்று பிரிவினருக்கும் மொத்தம் 49.5 விழுக்காடு போக எஞ்சிய 50.5 விழுக்காடு பொதுப் போட்டிக்கு என வைக்கப்பட்டிருந்தது. இந்தப் பொதுப்போட்டியில் இதர பிற் படுத்தப்பட்ட வகுப்பினரும் பட்டியல் வகுப்பினரும் பழங்குடி யினரும் உயர் சாதியினருடன் மதிப்பெண் தகுதி அடிப்படை யில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். பொதுப் போட்டிக்குரிய இந்த 50.5 விழுக்காட்டிலிருந்துதான் 10 விழுக்காடு இடங்கள் எடுக்கப்பட்டு உயர்சாதி ஏழைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக பொதுப் போட்டிக்குரிய 50.5 விழுக்காடு இடங்கள் 40.5 விழுக் காடாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இதனால் பொதுப்போட்டிப் பிரிவில் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் வகுப்பு, பழங்குடியினர் பெற்றுவந்த இடங்களின் எண்ணிக்கை 10 விழுக்காடு அளவுக்குக் குறைக்கப்பட்டு விடும். இதனால் இம்மூன்று பிரிவினரும் தங்களுக்குரிய விகிதாசாரப் பங்கு அடைவது தடுக்கப்படுகிறது.

கல்வியின்மை, வறுமை, ஏழ்மை, சுரண்டலுக்கு ஆளாக்கப் படுவது, கீழ்ச்சாதியாக மதிக்கப்படுவது, கொடுமைக்கு ஆளாக்கப்படுவது ஆகிய இவையெல்லாம் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடி மக்களிடையே ஈராயிரம் ஆண்டுகளாகப் படிந்துவிட்டுள்ள குழுப் பண்புகள் (Group Culture) ஆகும். இவற்றிலிருந்து இம்மக்கள் தங்களை விடுவித்துக் கொண்டு, சமுதாய நீரோட்டத்தில் சமமாகக் கலந்து வாழ்வதற்கு ஏதுவாக மேற்கொள்ளப்பட்டுள்ள (Enabliing Pro- visions) நடவடிக்கைகள்தான் அரசமைப்புச் சட்டத்தின் விதி 16 இல் அம்பேத்கர் ஏற்படுத்திய உட்பிரிவு (4) என்பதும் விதி 15இல் பெரியாரின் போராட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட உட்பிரிவு (4) என்பதும் ஆகும். இது சமூக நீதி என்பதாகும்.

உயர் சாதியினரில் ஏழ்மை என்பது குழுப் பண்பு ஆகாது; அது தனிப்பண்பு (Individual Culture) ஆகும். அவர்களின் ஏழ்மையைப் போக்குவதற்கு ஏதுவாக விதி 15இல் உட்பிரிவு (6) மற்றும் விதி 16இல் உட்பிரிவு (6) ஆகியவற்றைச் சேர்ப்பது தீர்வு ஆகாது. மாறாக அது சமூக நீதியின் அடிப்படை யையே தகர்த்துவிடும். பொருளாதார நிலைமை மாறக்கூடியது (Mobile) சாதிப்பண்பு என்பது மாறாதது. (Immobile.

8 (அ) இந்த 10 விழுக்காடு சட்டத்திருத்தம் தமிழ்நாட் டுக்கும் பொருந்தும். தமிழ்நாட்டில் பார்ப்பனர், கார்காத்த வேளாளர், தொண்டை மண்டல சைவ வேளாளர், ரெட்டியார், கம்மாநாயுடு, நாட்டுக்கோட்டைச் செட்டியார், சமணர் (ஜெயின்) முதலான மிக மிகக் குறைவான மக்கள் தொகையுடைய சமூகங்களே உயர்சாதிகளாக உள்ளனர். இவர்களுடைய மக்கள் தொகை 10 விழுக்காட்டுக்கும் குறைவாகவே இருக்கும். அவர்களுள்ளும் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள் மிக மிகக் குறைவாகவே இருப்பார்கள். அப்படிப்பட்ட நிலையில், அவர்களுக்கும் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்வது என்பது மிகப்பெரிய சமூக அநீதி ஆகும். உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் பெருங்கேடுகள் மண்டல் வழக்கில் உச்ச நீதி மன்றம் 16.11.1992இல் தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பில் விதி 15(4) மற்றும் 16 (4) ஆகியவற்றின்படி பிற்படுத்தப்பட்ட தன்மையின் அடிப்படையில் அளிக்கப்படும் இடஒதுக்கீடு சரியானதே என்று கூறிய உச்ச நீதிமன்றம், அந்த இடஒதுக் கீட்டுக்குக் கேடு விளைவிக்கும் கீழ்க்கண்ட கட்டளைகளையும் பிறப்பித்துவிட்டது.

(1) பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், இதர பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் ஆகிய மூன்று பிரிவினருக்குமான மொத்த இடஒதுக்கீடு என்பது 50 விழுக்காடு வரம்பை மீறக்கூடாது.

(2) பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குப் பதவி உயர்வில் இடஒதுக்கீடு கொடுக்கக் கூடாது; (3) பட்டியல் வகுப்பினருக் கும் பழங்குடியினருக்கும் இன்றிலிருந்து ஐந்து ஆண்டு களுக்குப் பிறகு அதாவது 16.11.1997முதல் பதவி உயர்வில் இடஒதுக்கீடு கொடுக்கக்கூடாது. (இதை இரத்துச் செய்து நாடாளுமன்றம் சட்டத்திருத்தம் செய்துவிட்டது.)

(4) பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் பொருளாதாரத்தில் வளர்ந்த பிரிவினருக்கு (Creamy Layer) இடஒதுக்கீடு கொடுக் கக் கூடாது.

(5) சில குறிப்பிட்ட படிப்புகளுக்கும் பதவிகளுக்கும் இடஒதுக்கீடு கொடுக்கக் கூடாது.

**மய்ய அரசு என்ன செய்ய வேண்டும்?**

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தடைகள் இடஒதுக்கீட்டுக்குப் பெருங்கேட்டினை உண்டாக்கிவிட்டன. பிற்படுத்தப்பட்ட வகுப்பி னரும் பட்டியல் வகுப்பினரும் பழங்குடியினரும் தங்கள் வகுப்புக்குரிய விகிதாசாரப் பங்கை அடைவதற்கு உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு தடையாக இருக்கின்றது; பிரதமர் மோடி அரசு நிறைவேற்றியுள்ள ஏழைகளுக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு என்கிற சட்டத்திருத்தம் மேலும் ஒரு தடையாகிவிட்டது. இந்தத் தடைகளை நாடாளுமன்றம் அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் செய்து நீக்க வேண்டும்.சமுதாயத்தில் உள்ள எல்லா வகுப்புகளுக்கும் கல்வியிலும் வேலையிலும் விகிதாசார வகுப்புவாரிப் பங்கு கீழ்கண்டவாறு கிடைத்திட மய்ய அரசு ஆவன செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | பட்டியல் வகுப்பினர் | 17.0 |
| 2. | பட்டியல் பழங்குடியினர் | 8.5 |
| 3. | எல்லா மதங்களையும் சார்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 57.0 |
| 4. | உல்லா மதங்களையும் சார்ந்த உயர் வகுப்பினர் | 17.5 |
| | மொத்தம் | 100.0 |

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையும் 1994ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி மாநாடுகளை நடத்தி வருகின்றன. பிரதமர்கள் நரசிம்மராவ், வாஜ்பாய், மன்மோகன்சிங், நரேந்திரமோடி ஆகியோருக்குக் கோரிக்கை மனுக்களையும் அவ்வப்போது அனுப்பி வருகிறது.

இந்தத் தலையங்கக் கட்டுரையை ஒவ்வொருவரும் இரண்டு தடவைகள் படியுங்கள்.

இளைஞர்களிடம் இவ்விவரங்களைக் கொண்டு போய்ச் சேருங்கள். போராடுவோம்! விகிதாசாரம் பெறுவோம்!

**1-2-2019** - **வே.ஆனைமுத்து**

## தமிழ் உரிமைக் கூட்டமைப்பினர் நடத்திய மொழிப்போர் ஈகியர் நாள் வீரவணக்கப் பேரணி



தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் 25.1.2019 வெள்ளி காலை 11 மணிக்கு மொழிப்போர் ஈகியர்நாள் வீர வணக்கப் பேரணி, கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் புலவர் இரத்தினவேலன் தலைமையில் வள்ளலார் நகர் மணிக்கூண்டு அருகிலிருந்து மூலக்கொத்தளம் இடுகாட்டில் உள்ள நடராசன்-தாளமுத்து நினைவிடம் வரை நடை பெற்றது. கூட்டமைப்பின் செயலாளர் காஞ்சி அமுதன் தொடக்க உரையாற்றினார். திரைப்பட இயக்குநர் வ.கௌதமன் தோழர்கள் பொழிலன், தமிழ்நேயன், க.அருணபாரதி, திபசி.குமரன், வாலாசா வல்லவன் உள்ளிட்டோர் உரையாற்றினர். பேராசிரியர்கள் ப.சிவக் குமார், மு.திருமாவளவன், கோச்சடை உள்ளிட்டோரும் வீ.இறையழகன், சா.குப்பன், தீ.கோபாலகிருட்டிணன், மா.பூங்குன்றன், சௌ.சுந்தரமூர்த்தி, உதயை வீரையன் தமிழ்மண் பதிப்பகம் உரிமையாளர் கோ.இளவழகன் வழக்குரைஞர் பா.புகழேந்தி உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். காஞ்சிபுரத்திலிருந்து தனிச் சிற்றுந்தில் தோழர்கள் வந்து கலந்து கொண்டனர்.

## நடுவண் அரசுப் பள்ளிகளில் இந்துமதத் திணிப்பு

நடுவண் அரசின்கீழ் இந்தியா முழுவதும் சிறந்த கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய 1,125 கேந்திர வித்யாலயா பள்ளிகள் இயங்குகின்றன. அண்மையில் திருத்தியமைக்கப் பட்ட விதிகளின்படி இப்பள்ளிகளில், ‘‘எல்லா மத நம்பிக்கை கொண்ட மாணவர்களும் காலையில் நடைபெறும் கூட்டத்தில் கட்டாயம் கலந்து கொண்டு, இறை வணக்கப் பாடலைப் பாடவேண்டும். ஆசிரியர்கள் தம் பொறுப்பில் உள்ள ஒவ்வொரு மாணவரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தொழுதகையுடன் கண்களை மூடியவாறு இறைவணக்கப் பாடலைப் பாடுவதைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். இவ்வாறு இறை வழிபாட்டில் பங்கேற்கத் தவறும் மாணவர் மற்ற மாணவர்களின் முன்னிலையில் தண்டிக்கப்படுவார்’’ (விதி 92) கூறப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியா முழுவதும் உள்ள கேந்திர வித்யாலயா பள்ளிகளில் காலை இறைவணக்கக் கூட்டத்தில் சமற்கிருதத் திலும் இந்தியிலும் இந்துக் கடவுள்கள் பற்றிய பாடல்களை மாணவர்கள் பாடி வருகின்றனர். இந்த இந்து மதத் திணிப்பு அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று விநாயக் ஷா என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார். ‘‘அரசமைப்புச் சட்டத்தின் விதி 19 வழங்கியுள்ள கருத்துச் சுதந்தரத்துக்கும் பேச்சு சுதந்தரத்துக்கும் இது எதிரானது. மேலும் விதி 28(1) அரசின் நிதி உதவியுடன் இயங்கும் கல்வி நிறுவனங்களில் மத போதனை செய்யக்கூடாது என்று கூறப் பட்டுள்ளது’’ என்று விநாயக் ஷா தன் விண்ணப்பத்தில் குறிப் பிட்டுள்ளார்.

கேந்திர வித்யாலயா பள்ளிகள் நடுவண் அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சரைத் தலைவராகக் கொண்டு, நடுவண் அரசின் நிதியுடன் கடந்த அய்ம்பது ஆண்டுகளாக இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மொழி பேசுகின்ற, பல்வேறு கலாச்சாரங்களும் மரபுகளும் கொண்ட மாணவர்கள் படிக்கின்றனர்.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதி ரோகின்டன் நாரிமன், ‘‘தண்டிக்கப்படுவோம் என்கிற அச்சுறுத்தலின்கீழ், சிறுபான்மை மதத்தவர், கடவுள் பற்றிய கவலையில்லாத வர்கள் (Agnostic) பகுத்தறிவாளர்கள், பல்வேறு மத நம்பிக்கைக் கொண்டவர்களின் குடும்பங்களின் பிள்ளைகள் இந்துமதக் கடவுளர் பற்றிய பாடல்களைப் பாடவேண்டும் என்று கட்டாயப் படுத்துவது என்பது மேலும் விரிவான ஆழ்ந்த விசாரணைக்கு உரியதாகும். எனவே இந்த வழக்கை அரசமைப்புச் சட்ட அமர்வு விசாரிப்பதற்குப் பரிந்துரைக்கிறேன்’’ என்று 28-1-2019 அன்று அறிவித்தார்.

பள்ளிப் பருவத்தில் மாணவர்கள் உள்ளத்தில் இந்துமத வெறியை ஊட்டி, இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே சொந்தமானது என்பதையும் இந்தியா ஒரே கலாச்சாரத்தைக் கொண்டது என்பதையும் நிலைநாட்ட முயலும் நரேந்திர மோடி தலைமை யிலான இந்துத்துவப் பாசிச ஆட்சியை வீழ்த்துவோம்.

# ‘இந்தி அலுவல் மொழி’ என்பதை இன்றேனும் எதிர்க்க வேண்டாமா?

## எல்லாப் பெரியார் தொண்டர்களும், எல்லாத் தமிழுணர்வாளர்களும் இன்றேனும் கவலையுடன் சிந்தியுங்கள்!

பெரியார் ஈ.வெ.ரா 1919 ஆகத்து முதல் 1925 நவம்பர் வரையில் காங்கிரசில் இருந்தார் என்பதை நாம் அறிவோம்.

அவர் பண்டித மோதிலால் நேருவை ஈரோட்டுக்கு அழைத்து வந்து, தாம் நடத்திய பள்ளியில், இந்தி வகுப்பை 1922-இல் தொடங்கினார்.

ஆனால், 1925 மே 2-இல் ‘குடிஅரசு’ கிழமை இதழைத் தொடங்கிய அவர், 1926-இல் “இந்தியைத் தமிழர்கள் ஏன் கற்க வேண்டும்?” என்று கேள்வி எழுப்பினார்.

1937-இல் இந்தியாவில் நடந்த மாகாணச் சட்டப் பேரவைத் தேர்தலில் 9 மாகாணங்களில் காங்கிரசு வென்றது. சென்னை மாகாணத்தில் காங்கிரசு தம் அமைச்சரவையை அமைத்தது. 1937-இல் நடைபெற்ற தேர்தலிலே போட்டியிடாத சி.இராச கோபாலாச்சாரியார் சட்டமன்ற மேலவை உறுப்பினராகி, சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகவும் ஆனார்.

அவர் பதவியேற்றவுடன் எல்லா உயர்நிலைப் பள்ளி களிலும் 6-ஆம் வகுப்பு முதல் இந்தி ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும் என முதலில் அறிவித்தார். அதற்கு எதிர்ப்பு இருந்தது. அதனால், மகாணத்தின் நான்கு பகுதிகளிலும் சேர்த்து 120 உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் - கட்டாயத் தேர்வுக்குரிய பாடமாக இந்தி கற்பிக்கப்படும் என, தானடித்த மூப்பாக, 21.4.1938-இல் ஆணை பிறப்பித்தார்.

காங்கிரசுக் கட்சி ஆட்சி அமைந்த மற்ற 8 மாகாணங் களில், வேறு எந்த மாகாணத்திலும் இந்தி ஒரு கட்டாயப் பாடமாகப் புகுத்தப்படவில்லை என்பது இங்கு நாம் அறியத் தக்கது. கட்டாய இந்தியை எதிர்த்த முதலாவது தமிழறிஞர் ஈழத்துச் சிவானந்த அடிகள். பின்னர் தஞ்சை - கரந்தை உமாமகேசுவரம் பிள்ளை, திருச்சி தி.பொ.வேதாசலம், கி.ஆ.பெ.விசுவநாதம், பன்மொழி அறிஞர் மறைமலை அடிகள் ஆகியோர் எதிர்த்தனர்.

திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் ஈ.வெ.ரா பங்குபெற்றார். தனிப்பட்ட தொண்டர்கள் சென்னையில், முதலமைச்சர் வீட்டின் முன் போராட்டம் நடத்தினர். முதலாவதாகப் போராட்டம் தொடங்கிய பல்லடம் பொன்னுசாமி 3.6.1938 அன்று கைது செய்யப்பட்டார். திருச்சி மாநாட்டின் முடிவுப்படி திருச்சியிலிருந்து சென்னை நோக்கி, பட்டுக் கோட்டை கே.வி.அழகிரிசாமி தலைமையில் இந்தி எதிர்ப்புப் பரப்புரைப் பெரும்படை 1.8.1938-இல் புறப்பட்டது.

அப்படை சென்னை கடற்கரையை 11.9. 1938- இல் அடைந்தது. அப்படையை வரவேற்ற பெரியார், அன்றுதான், “தமிழ்நாடு தமிழருக்கே!” என முதன்முதலாக முழங்கினார்.

நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியார், ஈ.வெ.ரா, “தமிழ்நாடு தமிழருக்கே! என்றால், மற்ற திராவிட மொழிக்காரர்கள் எங்கே போவது?” என்று கேள்வி எழுப்பினர்.

உடனே 1939-இல், “திராவிட நாடு திராவிடருக்கே!” எனப் பெரியார் முழங்கினார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் சூடு பிடித்தது. பெண்கள் 14.11.1938-இல் டாக்டர் தருமாம்பாள் தலைமையில் சிறை புகுந்தனர்.

பெரியார் 5.12.1938-இல் சிறை புகுந்தார். சென்னை சிறையிலிருந்து பெல்லாரி சிறைக்கு மாற்றப்பட்டார்; அங்கிருந்து கோவை சிறைக்கு மாற்றப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப் பட்டார். பெரியார் ஆச்சாரியாரின் ஆட்சிக்கு 19.2.1940-இல் எச்சரிக்கை விடுத்தார். 1938-1939 இந்தி எதிர்ப்புப் போராட்டம் 20 மாதங்கள் நடந்தது. அப்படி நீண்டநாள் மறியல் செய்ய ஒரு நாளைக்கு இரண்டுபேர் வீதம் வேண்டும்.

அப்போது, ஈரோட்டில் வாழ்ந்த லூர்துசாமி என்கிற இளைஞர் - பெரியார் குடும்பத்துக்குச் சொந்தமான இரண்டு மகிழுந்து களைப் பயன்படுத்தி, ஈரோடு சுற்று வட்டாரத்தி லிருந்து இளைஞர்களைத் திரட்டி, ஈரோட்டில் பெரியார் வீட்டில் தங்க வைத்திருப்பார். பெரியார் சென்னையிலிருந்து ஈரோட்டுக்கு, “2 பண்டல் போர்வை அனுப்புங்கள்” என்று லூர்துசாமிக்குத் தந்தி அனுப்புவார். “2 பண்டல் போர்வை அனுப்பவும்” என்றால், “சிறைக்குப் போக 2 ஆள்களை அனுப்புங்கள்” என்று பொருள். இச் செய்தியை 1992-இல் லூர்துசாமி அவர்களே பதிவு செய்திருக்கிறார். அப்படியெல் லாம் செய்துதான், 20 மாதங்களில், 1271 பேர் சிறை புகுந்தனர்.

எனினும் ஆச்சாரியார் கட்டாய இந்தி ஆணையை நீக்காமலேயே முதலமைச்சர் பதவியை விட்டு விலகினார். சென்னை மாகாண ஆளுநர்தான், 21.2.1940-இல் கட்டாய இந்தி கற்பிக்கும் ஆணையை விலக்கினார்.

கல்வியில் வடவரின் இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழன் தொடுத்த முதலாவது போர் இது. இது வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது. வெள்ளையர் 15.8.1947-இல் வெளியேறி விட்டனர். வெள்ளையர் காலத்தில் 1946 தேர்த லில் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை மாகாணச் சட்டப்பேரவை, ஓமந்தூர் பி.இராமசாமி ரெட்டியாரை மாகாணப் பிரதமராகத் (Premier) தேர்ந்தெடுத்தது. அவர் சென்னை மாகாணத்தில் இந்தியைக் கட்டாயப் பாடமாகத் திணித்தார்.

1944-இல் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில், அக்கட்சியின் பெயர் திராவிடர் கழகம் என மாற்றம் செய்யப் பட்டது.

திராவிடர் கழகத் தலைவர்கள் சென்னை சிந்தாதிரிப் பேட்டையில், எண் 1, மீரான் சாயபு தெருவில் உள்ள பெரியார் இல்லத்தில் கூடி, கட்டாய இந்தித்திணிப்பை எதிர்த்துப் போராடுவது என்று தீர்மானித்தனர். உடனே அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

குடந்தையில் போராட்டம் நடத்துவது என்று தீர்மானித்து, அறிஞர் சி.என்.அண்ணா துரை சர்வாதிகாரியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

2.11.1948-இல் குடந்தையில் போராட்டம் நடத்த மாகாண அரசு தடை விதித்தது.

தடையை மீறி, பெரியார் 18.12.1948-இல் மறியல் செய்தார். உடனே கைது செய்யப்பட்டு அலைக்கழிக்கப்பட்டார்.

காவல் துறையினர் போராட்டத் தொண்டர்களை காட்டுத் தனமாகத் தாக்கினர்.

எஸ்.டி.ஆதித்தன் என்கிற உயர் காவல் துறை அதிகாரி, போராட்டத் தொண்டர் களைக் கீழே தள்ளி, காவலர் உறை அணிந்த காலால் உதைத்து உருட்டிவிட்டார்.

ஒருநாள் இரவு நேரத்தில், போராட்டத் தொண்டர்களை - நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் உள்பட காவல் உந்துவில் ஏற்றி, சில மைல் தொலைவிலிருந்த சவுக்குக் காட்டுக்குள் கொண்டுபோய் இறக்கி விட்டு விட்டுச் சென்று விட்டனர். தொண்டர்கள் உயிர் பிழைத்து வந்து சேர்ந்தனர்.

இடையில், அறிஞர் சி.என்.அண்ணாதுரை, சென்னை சிந்தாதிரிப்பேட்டை, எண் 2, பாலகிருஷ்ணப் பிள்ளைத் தெருவில் ‘விடுதலை’ அலுவலகத்தில் இருந்த பெரியாரை நேரில் கண்டு, “அய்யா! காவல் துறையினர் போராட்டத் தொண்டர்களைக் கண்மூடித்தனமாகத் தாக்குகின்றனர்” என்று முறையிட்டார். அந்த முறையீட்டைக் கேட்ட பெரியார் பொறுமையாக, “போராட்டம் என்றால் தாக்கத்தான் செய் வார்கள்; முத்தமா கொடுப்பார்கள்; திரும்பிப் போங்கள்” என்று கூறிவிட்டு உடனே எண் 1, மீரான் சாயபு தெரு வீட்டுக்குப் போய்விட்டார்.

மேற்கொண்டு பெரியார் என்ன செய்தார்?

சேலம் அ.சித்தய்யனை வரச்செய்து, முன்னாள் அமைச்சர் எஸ்.முத்தய்ய முதலியாரை நேரில் பார்த்து, அவரைத் தஞ்சை மாவட்ட ஆட்சியரிடம் பேசச் செய்தார்.

எஸ்.முத்தய்ய முதலியார் ஆட்சியரை நேரில் பார்த்து, “இந்தி எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் பேரில், காவலர்கள் தாக்குதல் நடத்துவதை நிறுத்தச் சொல்லுங்கள்” என்று பரிந்துரை செய்தார். அதன்பின்னர் குடந்தை இந்தி எதிர்ப்பு அறப்போரை, பெரியார் தற்காலிகமாகத் தள்ளிவைத்தார்.

இறுதியில், பெரியாரே பிரதமர் ஓமந்தூ ராரை நேரில் கண்டு வேண்டுகோள் வைத்தார்.

ஓமந்தூரார் அரசு, கட்டாயப் பாடமாகத் திணிக்கப்பட்ட இந்தியை விருப்பப் பாடமாக மாற்றியது. எல்லோருக்கும் இந்தி விருப்பப் பாடம். இந்திப் பாடத்தில் எத்தனை மதிப்பெண் பெற்றாலும் அது மாணவனின் தேர்ச்சியைப் பாதிக்காது.

நான் அறிந்தவரையில், 1967 வரை அதே நிலைதான் சென்னை மாகாணத்திலும், தமிழ் மாநிலத்திலும் நீடித்தது. இது பழைய போராட்ட வரலாறு.

இப்போது நம் முன் உள்ள கேள்வி இதைப் பற்றியது அன்று. வேறு என்ன?

“இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியாக இந்தி ஏன் இருக்க வேண்டும்?” என்பது தான், நம் முன் 26.1.1950 முதல் உள்ள சிக்கல்.

இந்திய அரசமைப்புச் சட்டம் பற்றி ஒவ்வொரு குடிமகனுக் கும் தெரியுமோ, தெரியாதோ - அச்சட்டம் ஒவ்வொரு இந்தியக் குடிமகனையும் கட்டுப்படுத்துகிறது.

ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமைகளை அளிப்பது அச் சட்டம்; உரிமைகளைப் பறிப்பதும் அச்சட்டமே.

நாம் தமிழர்கள். நம் ஊரில் இந்திய ஒன்றிய அரசின் ஆளுகையின்கீழ்,

1) அஞ்சல் துறை - தொலைபேசித் துறை,
2) தொடர் வண்டித் துறை,
3) நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கித் துறை,
4) வருமான வரித் துறை

முதலான துறைகளின் அலுவலகங்கள் இயங்குகின்றன.

இவை நம் மாநில எல்லைக்குள் இயங்குகின்றன.

இவ் வெல்லாத் துறைகளிலும் தமிழ்தான் அலுவல் மொழியாக இருக்க வேண்டும். ஆங்கிலமோ, இந்தியோ, அல்லது இவ்விரண்டு அயல்மொழிகளுமோ அன்றாட அலுவல் மொழியாக இருக்கக் கூடாது.

இப்படியே, இந்தியா முழுவதிலுமுள்ள 29 மாநிலங் களிலும், 7 ஒன்றியப் பகுதிகளிலும் அந்த அந்த மாநில மொழியே - இந்திய ஒன்றிய ஆளுகைக்கு உள்பட்ட எல்லா நிறுவனங்களிலும் அலுவல் மொழியாக இருக்கவேண்டும். இது நம் கோரிக்கை. இதற்கான உரிமை இந்திய அரசமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்; அப்படி அளிக்கப்பட வில்லை. எதனால்? ஏன்?

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 22 பகுதிகளும் (22 Parts), 395 விதிகளும் (395 Artiles) உள்ளன.

இவற்றுள் 17-ஆம் பகுதியிலுள்ள 343-ஆம் விதி முதல் 349-ஆம் விதி முடிய 7 விதிகளிலுள்ள விவரங்களில் - இது பற்றிப் பேசப்படுகிறது.

காட்டாக, 343(1)-ஆம் விதி, என்ன கூறு கிறது?

“இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியாக தேவநாகரி வரி வடிவிலான இந்தி இருக்கும்” என்று திட்டவட்டமாகக் கூறுகிறது.”

(343(1) The Official Language of the Union shall be Hindi in Devanagari Script)

இதன்படி மிக விரைவில் - தமிழ்நாட்டிலுள்ள மேலே சொல்லப்பட்ட எல்லா இந்திய ஒன்றிய நிறுவனங்களிலும் இந்தி மட்டுமே அலுவல் மொழியாக இருக்கும்.

ஏன் இந்தவிதி இப்படி எழுதப்பட்டது?

இந்தி, இந்தியாவில் அதிக எண்ணிக்கை யுள்ள மக்களால் பேசப்படுகிறது என்று கூறித்தான், இப்படி எழுதப்பட்டது.

ஆனால், இது உண்மை அன்று; கடைந்தெடுத்த பொய்.

எப்படியெனில், 2001-இல் இந்திய அரசு எடுத்த இந்திய மக்கள்தொகைக் கணக்குப்படி மொத்த இந்திய மக்கள் தொகை 102.86 கோடி.

இதில் இந்தி பேசுவோர் - இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டோரின் தொகை வெறும் 25.79 கோடி. இத்துடன் இந்தி கலப்படமுள்ள 49 வெவ்வேறு தாய்மொழிகளையும் மற்றும் சில தாய்மொழிகளையும் வேண்டுமென்றே சேர்த்து, இந்தி என்கிற தலைப்பில் 42.20 கோடிப் பேர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தப் புள்ளிவிவரம் எப்படிச் சரியாகும்? இது பொருத்த மற்றது; பொய்யானது.

இன்றுவரை இதை எதிர்த்துத் திராவிடர் இயக்கங்கள் - தமிழர் இயக்கங்கள் என்ன செய்தன?

திராவிட முன்னேற்றக் கழகத்தினர், 1986 நவம்பர் 9 முதல் திசம்பர் 15 வரை தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் புதுவையிலும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 17-ஆவது பகுதி முழுவதும் அச்சுப் போட்டு அவற்றை எரித்து நூற்றுக்கணக் கில் கைதாயினர்.

பெரியார், 1960-இல் தமிழகம் தவிர்த்த இந்திய தேசப் படத்தை எரித்தார். தனித் தமிழ் நாட்டுப் பிரிவினையைக் கோரினார்.

தி.மு.க தலைவர் அறிஞர் சி.என். அண்ணா துரை தில்லி நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் 1963-இல் பேசும்போது, ‘‘திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கையை தி.மு.க கைவிடு கிறது’’ என்று அறிவித்தார்.

இவற்றில் 1960-இல் பெரியார் நடத்திய இந்திய தேசப்பட எரிப்புப் போராட்டமும், இந்தி எதிர்ப்புக்காகத் தி.மு.க 1986-இல் நடத்திய போராட்டமும் தவிர இந்தி ஒழிப்புக்காக எதுவும் நடைபெறவில்லை.

எனவே, நம் தாய்மொழி தமிழ் தமக்கு உயிர் போன்றது என்று கருதும் எல்லாத் தமிழ் உணர்வாளர்களும், எல்லாப் பெரியார் தொண்டர்களும் இந்த இழிநிலையை மாற்ற ஒற்றுமையாக முயற்சிப்போம், வாருங்கள் என அன்புடன் வேண்டுகிறேன்.

**- வே. ஆனைமுத்து**

# பெரியாரின் பெருந்தொண்டர் குமிழியம் து.இராசமாணிக்கம் மறைந்தார்!



அரியலூர் மாவட்டம், செந் துறை வட்டம், குமிழியம் து.இராச மாணிக்கம் (முதுநிலை கால்நடை ஆய்வாளர்) அவர்கள் தம்முடைய 81ஆவது வயதில் 30-11-2018 அன்று காலை 8.30 மணியளவில் மறை வுற்றார். இவருக்கு மனைவி பார்வதி, மகன்கள் ஆசிரியர் கௌதமன், இளங்கோவன், இராசேந்திரன் மகள் மலர்விழி ஆகியோர் உள்ளனர். அன்னாரை இழந்து மிகவும் துயருறுகின்றனர்.

இவர் இளமைக்காலம் தொட்டே தந்தை பெரியார் பற்றாளர். சிறந்த சுயமரியாதைக்காரர். தமிழ்த் தேசிய உணர்வாளர். இவர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், ஆசிரியர் கி. வீரமணி, அறிஞர் வே.ஆனைமுத்து, முன்னாள் அமைச்சர்கள் நாவலர் நெடுஞ்செழியன், அன்பில் தர்மலிங்கம் ஆகியோருடன் பழகிடும் வாய்ப்பைப் பெற்றவர். அரசு ஊழியர்கள் சங்கத் தலைவர் சிவ. இளங்கோ அவர் களுடன் இணைந்து பணியாற்றி அரசு ஊழியர்களின் நலனுக்குப் பாடுபட்டவர்.

இவர் இலால்குடி வட்டம், அன்பில் கிராமத்தில் பணியாற்றிய போது, முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர் களின் தலைமையில் தந்தை பெரியார் அவர்களை அழைத்து கால்நடை கருத்தரிப்பு விழா நடத்தினார். விழாவில் தன் னுடன் பணியாற்றிய கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியில் இருக்கும் போதே இறந்தவரின் குடும்பத்திற்கு தம் பொறுப்பில் ரூ.10,000/- நிதி திரட்டி பெரியார் மூலமாக வழங்கினார்.

இறந்தவரின் குடும்ப நிலையை அறிந்து, இது போன்ற உதவிகளை அரசுதான் செய்திட வேண்டுமென தந்தை பெரியார் வலியுறுத்தி விழாவில் பேசினார். இந்தச் செய்தியை அன்பில் தர்மலிங்கம் மூலமாக அறிந்திட்ட அன்றைய முதல மைச்சர் ‘‘டாக்டர் கலைஞர்’’ அவர்கள் அரசு ஊழியர்கள் பணி யில் இருக்கும் போது இறந்தால் இறுதிச் சடங்கு செலவிற்காக ரூ.10,000/- வழங்கிட அரசாணை வழங்கப்பட்டது. இந்த வரலாற்றுச் சாதனைக்கு வித்திட்டவர் குமிழியம் து. இராச மாணிக்கம் அவர்கள் என்பதை நினைவுகூர வேண்டும்.

மா.பெ.பொ.க. மாநில பொதுச் செயலாளர் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களிடம் பேரன்பும் மதிப்பும் கொண்ட உற்ற தோழர் மறைவுற்றார்.

**வாழ்க குமிழியம் து. இராசமாணிக்கம் புகழ்!**

# பள்ளிக்கல்வியின் வீழ்ச்சியும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களின் பாதிப்பும்

- க. முகிலன்

இந்திய அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த பின், பத்து ஆண்டுகளுக்குள் - அதாவது 1960க்குள் 14 அகவைக் குட்பட்டவர்களுக்குக் கட்டாய இலவயக் கல்வி அளித்திட அரசு முயல வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தில் எழுதப் பட்டுள்ளது. ஆனால் அய்ம்பது ஆண்டுகள் கழித்து - 2010இல் தான் இலவய, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் நடப்புக்கு வந்தது. 2018ஆம் ஆண்டில் ஆறு அகவை எய்திய சிறுவர்களில் 96 விழுக்காட்டினர் பள்ளியில் பயில் கின்றனர். ஆனால் பள்ளிகளில் மாணவர்களின் கல்வித் தரம் கவலைக்குரியதாக இருக்கிறது.

'பிரதாம்' என்கிற தொண்டு நிறுவனம் 2006ஆம் ஆண்டு முதல் இந்திய அளவில் பள்ளிகளில் மாணவர்களின் கல்வித் திறனை ஆய்வு செய்து ஆண்டுதோறும் அறிக்கை வெளியிட்டு வருகிறது. இது "கல்வி நிலை குறித்த ஆண்ட றிக்கை" (Annual Status of Education Report - ASER - ஆசர்) எனப்படுகிறது. 2018ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளைக் கொண்ட 596 மாவட்டங்களில் 5.5 இலட்சம் மாணவர்களிடம் ஆய்வு செய்தது. தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களில் 930 ஊர்களில் 15,749 மாணவர்களிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2018ஆம் ஆண்டிற்கான ஆசர் அறிக்கை 2019 சனவரியில் வெளியிடப்பட்டது. ஒவ்வோராண்டும் இந்த அறிக்கை இந்திய அளவில் கல்வியாளர்கள் மட்டுமல்லாது மற்றவர்களின் கவனத் தையும் ஈர்ப்பதாக அமைந்து. அதன் மீதான விவாதங்கள் நடக்கின்றன.

ஊரகப் பகுதியில் 2018இல் எட்டாம் வகுப்புப் படிக்கும் மாணவர்களில் 74.6 விழுக்காட்டினர் மட்டுமே இரண்டாம் வகுப்புக்கான தாய்மொழிப் பாடப் புத்தகத்தைப் படிக்கும் திறன் பெற்றிருந்தனர். இது 2008ஆம் ஆண்டில் 84.8 விழுக்காடாக இருந்தது. அதாவது எட்டாம் வகுப்பை முடிக்கும் மாணவர் களில் நான்கு பேரில் ஒருவருக்குப் படித்தறியும் திறன்கூட இல்லை; எட்டாவது படித்தாலும் கிட்டத்தட்ட எழுத்தறிவற்ற நிலையிலே இருக்கின்றனர் என்கிற கொடிய அவலம் அனைவரும் கவலையுடன் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். இதேபோன்று எட்டாம் வகுப்பு மாணவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்களால் இரண்டாம் வகுப்புக்குரிய எளிய வகுத்தல் கணக்கையும் செய்ய முடியவில்லை. உலக அளவிலான தரத்தோடு ஒப்பிடுகையில், நமது எட்டாம் வகுப்பு மாண வனின் சராசரி அறிவுத் திறனானது கொரிய நாட்டின் மூன்றாம் வகுப்பு படிக்கும் மாணவரின் அளவுக்குத்தான் உள்ளது.

மூன்றாம் வகுப்புப் பயிலும் மாணவர்களில் 30 விழுக் காட்டிற்கும் குறைவானவர்களே இரண்டாம் வகுப்புக்கான இரட்டை இலக்கக் கழித்தல் கணக்கைச் செய்தனர்; மொழிப்




பாட நூலைப் படித்துக் காட்டினர். கல்வித் தரத் தாழ்ச்சியில் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபாடு இருக்கிறது. உத்தரப் பிரதேச மாநிலத்தில் அரசுப் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு மாணவர்களில் 25 விழுக்காட்டினருக்கு என்ன எழுத்து என்பதைக்கூடக் கண்டறிய முடியவில்லை. 37 விழுக்காடு மாணவர்களுக்கு என்ன எழுத்து என்று தெரிகிறது; ஆனால் எழுத்தைக் கூட்டிப் படிக்கத் தெரியவில்லை.

2018ஆம் ஆண்டின் ஆசர் அறிக்கையின்படி. ஒவ்வொரு வகுப்பிலும் நன்றாகப் படிக்கும் மிகச் சில மாணவர்களைத் தவிர, பெரும்பாலான மாணவர்கள் தாங்கள் பயிலும் வகுப்புக்கேற்ற பாடங்களைப் பயிலும் திறனற்றவர்களாகவே இருக்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது. பணம் கட்டிப் பயிலும் தனியார் பள்ளிகளில் அரசுப் பள்ளிகளைவிட சிறிது மேம்பட்ட நிலை இருந்த போதிலும் அவற்றிலும் கல்வித் தரம் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறது.

தமிழ்நாட்டின் பள்ளிகளில் மாணவர்கள் தமிழைப் படிக்கத் தெரியாத - படித்தாலும் புரிந்து கொள்ளாத பெரும் கேடான நிலை இருக்கிறது. 2018இன் அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் மூன்றாம் வகுப்பு மாணவர் களில் 10.2 விழுக்காட்டினர் மட்டுமே இரண்டாம் வகுப்புக் கான தமிழ்ப் பாடத்தைப் படித்தனர். 2016இல் இது 17.7 விழுக்காடாக இருந்தது. தனியார் பள்ளிகளின் நிலையோ இன்னும் கேடான நிலையில் உள்ளது. மூன்றாம் வகுப்பு மாணவர்களில் 7.6 விழுக்காட்டினர் மட்டுமே இரண்டாம் வகுப்புக்கான தமிழ்ப் பாடத்தைப் படித்தனர்.

தமிழ்மொழியைக் கற்றலில் மட்டும் இந்த இழிநிலை இல்லை; இந்தி உள்ளிட்ட எல்லாத் தாய்மொழிகளையும்

பள்ளிகளில் மாணவர்கள் படிப்பதில் இதே அவல நிலைதான் இருக்கிறது. தாய்மொழியைக் கற்பதில் ஏன் இந்தத் தடுமாற்றம் -வீழ்ச்சி? பிறந்து வளரும் குழந்தை தன் தாயின் வாய் மொழி மூலம் ஒரு மொழியைக் கற்பதால்தான் தாய்மொழி எனப்படுகிறது. ஆனால் குழந்தைக்கு அம்மா-அப்பா என்பதற்கு மாறாக, 'மம்மி' - 'டாடி' என்று சொல்லித் தரப்படுகிறது. இயல்பான முறையில் தாய்மொழியை அறிகின்ற - கற்கின்ற வாய்ப்பு குழந்தைகளுக்கு மறுக்கப்படுகிறது. மழலையர் பள்ளிகளில் தமிழ்ப் பாட்டுக்குப் பதிலாக ஆங்கிலப் பாடல்கள் பொருள் புரியாமலேயே கிளிப்பிள்ளை போல் சொல்லித் தரப்படுகின்றன. தமிழ் எழுத்துகளுக்குப் பதிலாக முதலில் ஆங்கில எழுத்துகள் கற்பிக்கப்படுகின்றன. மழலையர் பள்ளியில் சேரும்போதே தன் குழந்தைக்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என்கிற மோகத்தால் பெற்றோர் தம் குழந்தைகளிடம் ஆங்கிலச் சொற்கள் மிகுதியும் கலந்த தமிழில் பேசுகின்றனர்.

பன்னாட்டுப் பெரு முதலாளிய நிறுவனங்களின் ஏகாதிபத்திய சூழ்ச்சிக்கு நடுவண் அரசும், மாநில அரசுகளும் கைக்கூலிகளாக மாறி, ஆங்கில வழிக் கல்வியைக் கடந்த முப்பது ஆண்டுகளில் ஊக்குவித்ததால் தாய்மொழியைப் படிக்கத் தெரியாத தலைமுறைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. 2018ஆம் ஆண்டின் ஆசர் அறிக்கை விடுக்கும் இந்த எச்சரிக்கையை உணர்ந்து, ஆங்கில வழிக் கல்வியை எதிர்த்து, தாய்மொழிவழிக் கல்வியை மீட்டெடுக்காவிட்டால், இந்தியத் தாய்மொழிகளின் அழிவைத் தடுக்க முடியாது.

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளையும் சேர்த்து ஆங்கில வழியில் 60 விழுக்காடு மாணவர்கள் படிக்கின்றனர். ஆங்கில வழியில் பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் தமிழை ஒரு மொழிப் பாடமாகப் படித்த போதிலும் 'தினத்தந்தி' நாளேட்டைக்கூட படித்துப் புரிந்து கொள்ள முடியாத அளவில் தான் அவர்களின் தமிழறிவு இருக்கிறது. ஆங்கில வழியில் படிக்கும் மாணவர்களின் தலைமுறையால் பழந்தமிழ் இலக்கியத்தை மட்டுமல்லாது, தற்கால இலக்கியத்தையும் படிக்க முடியாது.

நோபல் பரிசு பெற்ற தமிழரான வெங்கடராமன் இராமகிருட்டிணன் சென்னையில் 13-1-19 அன்று ஒரு நிகழ்ச்சியில் பேசிய போது, "இளம்பிள்ளைகள் தங்கள் தாய்மொழியில் கற்பதன் மூலமே அறிவியலில் முன்னேற முடியும். 95 விழுக்காடு மக்களுக்கு ஆங்கிலம் தெரியாத நிலையில் அறிவியலை ஆங்கில மொழிக்குள் அடக்குவது சரியா? நீங்கள் பிறந்து வளர்ந்து வாழும் சூழலுடன் பொருந்தியதாக உங்கள் கல்வி மொழி இருத்தல் வேண்டும். சில பேர் விதிவிலக்காக ஆங்கிலத்தில் திறமை பெற்றிருக்கலாம். ஆனால் தாய்மொழி வழியில் கல்வி கற்பதே எல்லா வகையிலும் சிறந்தது" என்று வலியுறுத்தினார்.

ஆனால் தமிழ்நாட்டு அரசு அங்கன்பாடி மையங்களில் மழலையர் வகுப்புகளைத் தொடங்கும் திட்டத்தின்படி, முதற்கட்டமாக 2381 மையங்களில் ஆங்கில வழியிலான மழலையர் வகுப்புகளை 2019 சனவரியில் தொடங்கியுள்ளது. ஆங்கில வழியிலான தனியார் பள்ளிகளில் மாணவர்கள் அதிக அளவில் சேருவதால், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து, 3400 பள்ளிகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மழலையர் பள்ளிகளைத் தமிழ்நாட்டு அரசு தொடங்குவது என்பது தலைவலி போய் திருகுவலி வந்த கதையாகும்.

கிராமப்புறப் பள்ளிகளின் கல்வித் தரத்தின் வீழ்ச்சி என்பது நேரடியாகத் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் மாணவர்களின் கல்வியின் எதிர்காலத்தைப் பாழாக்குகிறது. கிராமப்புறப் பள்ளிகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக 5ஆம் வகுப்பு வரையிலும் 8ஆம் வகுப்பு வரையிலும் எந்தவொரு மாணவனையும் 'பெயில்' ஆக்கக் கூடாது என்று 2009ஆம் ஆண்டின் கல்வி உரிமைச் சட்டத்தில் இருந்த விதியை மோடி அரசு 2018இல் நீக்கி விட்டது. தேர்வில் தேர்ச்சிபெறாத மாணவர்களை மீண்டும் அதே வகுப்பில் மேலும் ஓராண்டு படிக்கச் செய்வதன் மூலம் கல்வித் தரத்தை உயர்த்தலாம் என்று அரசு கருதுகிறது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் உரிமை மாநிலங்களின் விருப்பத்துக்கு விடப்பட்டுள்ளது. கல்வியாளர்கள் 'பெயில்' ஆக்கும் திட்டத்தை எதிர்க்கின்றனர். பள்ளிகளில் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்படுத்தாமல், மாணவர்களைப் 'பெயில்' ஆக்குவது என்பது செருப்புக்கு ஏற்ப காலை வெட்டுவது போன்றதாகும் என்று கூறுகின்றனர்.

எட்டாம் வகுப்பு வரை தடையற்ற தேர்ச்சி முறை தற்போதுள்ள நிலையிலேயே சாதி காரணமாகவும் வறுமை காரணமாகவும் மாணவர்கள் பள்ளிப் படிப்பை இடையிலேயே கைவிடும் நிலை இருக்கிறது. முதல் வகுப்பில் சேரும் 100 மாணவர்களில் 5ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு முடிக்கும் முன பள்ளிகளிலிருந்து நின்று விடுகின்றவர்கள் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

எனவே தடையற்ற தேர்ச்சி என்ற நிலையை நீக்கி விட்டால் பள்ளிகளில் மாணவர்களின் இடைநிற்றல் அதிகமாகும். இதனால் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் தொடக்கக் கல்வியும் பெற முடியாத நிலை ஏற்படும். கல்வி உரிமைச் சட்டத்தில் இலவயக் கல்வி என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் 50 விழுக்காடு மாணவர்கள் தனியார் பள்ளிகளில் பணம் கட்டிப் படிக்கும் அளவுக்குக் கல்வியில் தனியார் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. தனியார் பள்ளிகளின் பெருக்கம் இடை நிற்றல் அதிகமாவதற்கு வழிகோலும்.

பள்ளிகளில் கல்வியின் தரம் சீரழிந்ததற்கு முதன்மையான காரணம் தாராளமயம், தனியார் மயம் என்ற பெயரில் அரசுகள் கல்வி அளிக்கும் தம் பொறுப்பைத் தட்டிக் கழித்ததே ஆகும். கல்வி தனியார்க்குத் திறந்துவிடப்பட்டதால் கிராமப்புறங்களிலும் ஆங்கிலவழிப் பள்ளிகள் புற்றீசல் போல் தோன்றி

| வ. எண். | மாநிலம் | முதல் வகுப்பில் சேருவோர் | 5ஆம் வகுப்பு முடிப்போர் | 10ஆம் வகுப்பு முடிப்போர் | 12ஆம் வகுப்பு முடிப்போர் |
|---|---|---|---|---|---|
| 1. | ஜார்கண்ட் | 100 | 83 | 53 | 30 |
| 2. | அருணாசலப்பிரதேசம் | 100 | 80 | 56 | 38 |
| 3. | நாகாலாந்து | 100 | 80 | 55 | 44 |
| 4. | பீகார் | 100 | 89 | 54 | 46 |
| 5. | மிசோரம் | 100 | 86 | 60 | 54.8 |
| 6. | தெலுங்கானா | 100 | 93 | 72 | 54.8 |
| 7. | மேற்குவங்கம் | 100 | 94 | 67 | 55.1 |
| 8. | சிக்கிம் | 100 | 92 | 71 | 56 |
| 9. | ஜம்மு-காஷ்மீர் | 100 | 87 | 66 | 56.6 |
| 10. | மணிப்பூர் | 100 | 84 | 67 | 57.2 |
| 11. | திரிபுரா | 100 | 95 | 67 | 58 |
| 12. | அசாம் | 100 | 95 | 69 | 60 |
| 13. | ஒடிசா | 100 | 95 | 68 | 67.9 |
| 14. | குசராத் | 100 | 97 | 74 | 68.3 |
| 15. | சத்தீஷ்கர் | 100 | 96 | 72.5 | 71 |
| 16. | மத்தியப்பிரதேசம் | 100 | 94 | 71.9 | 72 |
| 17. | உத்தரப்பிரதேசம் | 100 | 91 | 79 | 74.2 |
| 18. | கோவா | 100 | 99 | 83 | 74.3 |
| 19. | தில்லி | 100 | 100 | 89 | 79 |
| 20. | இராஜஸ்தான் | 100 | 94 | 80 | 80 |
| 21. | பஞ்சாப் | 100 | 97 | 89 | 84 |
| 22. | அரியானா | 100 | 100 | 88 | 85.2 |
| 23. | உத்தர்காண்ட் | 100 | 95 | 87 | 85.3 |
| 24. | கேரளம் | 100 | 100 | 87 | 85.6 |
| 25. | மகாராட்டிரம் | 100 | 99 | 88 | 85.6 |
| 26. | இமாச்சலப்பிரதேசம் | 100 | 99 | 92 | 85.8 |
| 27. | தமிழ்நாடு | 100 | 99 | 89 | 86.2 |

யுள்ளன. ஆசிரியர் பயிற்சியும் தனியார் மயமாக்கப்பட்டதால் கடந்த முப்பது ஆண்டுகளில் முறையான பயிற்சி பெறாத வர்களே அரசுப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும் ஆசிரியர்களானார்கள். கல்வி வணிகமயமானதால் கை யூட்டும் ஊழலும் பெருகி கல்வியின் தரம் சீர்கெட்டது. நகரங்களில் பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு மட்டுமே சிறந்த பள்ளிகளில் தரமான கல்வி கிடைக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. நடுத்தர - ஏழைக் குடும்பங்களின் பிள்ளை கள் தரமற்ற பள்ளிகளில் தான் படிக்க முடியும்.

முப்பது ஆண்டுகளுக்குமுன் ஏழை-பணக்காரன் என்கிற வேறுபாடு இல்லாமல் எல்லோருக்கும் சமமான கல்வி வழங்கப்பட்டது. இந்நிலையை மீண்டும் அடைவதற்கு முதலில் முன்பு இருந்தது போல் பன்னிரண்டாம் வகுப்பு வரை தாய்மொழிவழிக் கல்வி மட்டுமே என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். வளர்ச்சி பெற்ற அய்ரோப்பிய நாடுகளில் இருப்பது போல் பள்ளிக்கல்வி முழுவதும் அரசுப் பள்ளிகள் மூலம் என்று ஆக்கிட வேண்டும். பள்ளிகளில் கல்வியின் தரத்தை மீட்டெடுப்பதற்கான முதற்படி இதுவே யாகும்.

# பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடா? சமூக நீதியைக் குலைக்கும் செயலா? சதியா?

- குட்டுவன்

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 340,341,342 பிரிவுகள் கல்வியில், சமுதாயத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு இடஒதுக்கீட்டு உரிமையை வழங்குகின்றன. இதனடிப்படையில்தான் மேற்கூறப்பட்ட பிரிவினருக்கு இடஒதுக்கீடு அளிக்கும் ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. குறிப்பாக340(1)ஆவது பிரிவு சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கியோரின் நலனை ஆய்வு செய்வதற்கு ஓர் ஆணையத்தை அவ்வப்போது அமைத்து ஒடுக்கப்பட்டவர்களின் நலனை உறுதி செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

இந்த அரசமைப்புச் சட்டத்தின் வழிதான் காகா கலேல்கர் குழுவின் முதல் அறிக்கை 1955இல் அளிக்கப்பட்டது. இவ்வறிக்கை நிலவுரிமை, நிலப்பங்கீடு, பொருளாதாரக் கூறுகள் என எல்லாவற்றையும் ஆய்ந்துதான் பின்தங்கியோர்க்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று பரிந்துரையும் வழங்கியது. காகா கலேல்கர் அறிக்கை எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை பொதுவாகக் குறைந்த அளவில்தான் வளர்ந்து வருகிறது. பின்தங்கியோரில் எழுதப்படிக்கத் தெரிந்தோரின் எண்ணிக்கையோ மிக மோசமான அளவில் குறைந்து காணப்படுகிறது என்று தனது அச்சத்தை வெளிப்படுத்தியது. பல்கலைக் கழகப் பட்டப்படிப்புகளிலும் உயர் கல்வியிலும் ஆய்வு மையங்களிலும் பின்தங்கிய மாணவர்கள் படிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரை வழங்கியது. காகா கலேல்கரின் மேற்கூறிய பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படாமல் சமூகநீதி புறந்தள்ளப்பட்டது. அரசமைப்புச் சட்டம் 340(1) பிரிவின்படி 1979ஆம் ஆண்டு மண்டல் குழுவைப் பிரதமர் மொரார்ஜி தேசாய் நியமனம் செய்தார். ஏழு உறுப்பினர்கள் அடங்கிய சமூக ஆய்வாளர்கள் பல்வேறு அளவுகோல்களை எடுத்துக்கொண்டு ஆய்வு செய்து தங்களது அறிக்கையை மண்டல் குழுவிடம் அளித்தனர்.

1980இல் மண்டல் குழுவும் தனது பரிந்துரையைப் பல சமூகப் பொருளாதாரக் காரணிகளை முழுமையாக ஆய்ந்து, மாநிலங்கள் அளித்த பின்தங்கியோரின் பட்டியலையும் இணைத்து 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை அளித்தது. உச்சநீதிமன்ற ஆணையின்படி மொத்த இடஒதுக்கீட்டின் அளவு 50 விழுக்காட்டிற்குள் இருக்க வேண்டும் என்பதால்தான் குறைந்த அளவிலான 27 விழுக்காடு அளவினை இதரப் பிற்பட்டோர்க்கு அளிக்க வேண்டும் என ஒன்றிய அரசு முடிவு செய்தது. பல புள்ளிவிவரங்கள்நில உடைமை உட்பட பொருளாதார-சமூக ஆய்வுகள் அடிப்படையில் மண்டல்குழுப் பரிந்துரையை வழங்கியிருந்தாலும் குறைந்த அளவான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அளித்தது. அபபோதைய பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான ஒன்றிய அரசுப் பொருளதார அடிப்படையில் 10 விழுக்காடு இட ஒதுக்கிட்டினை வழங்க முயன்றது. உச்ச நீதிமன்றம் இந்த இட ஒதுக்கீட்டைச் செல்லாது என்று அறிவித்தது.

ஆனால் திருவாளர் மோடி உயர்சாதியினருக்கு10 விழுக்காட்டு இடஒதுக்கீட்டை அளிக்கும் 124வது அரசமைப்புச் சட்டப்பிரிவைத் திருத்துவதற்கு எவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஏமாற்றி உள்ளார் என்பதை நாடாளுமன்ற, சட்டமன்ற ஆய்வு மையத்தின் தலைவரும் அமைப்பாளருமான மாதவன் ஜனவரி 12 2019 நாளிட்ட இந்து நாளிதழில் விளக்கியுள்ளார். ஜனவரி 7ஆம் நாள் ஒன்றிய அரசின் அமைச்சரவை கூடி 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படும்; மக்களவையில் அரசமைப்புச் சட்டத்திருத்த வரைவு ஜனவரி 8ஆம் நாள் கொண்டுவரப்படும் என்ற செய்தி வெளியிடப்பட்டது.

இதில் என்ன வேடிக்கையென்றால் 8ஆம் நாள்தான் நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத்தொடரின் இறுதி நாளாகும்.

இந்தச் சட்டத்திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்ற மேலவையில் ஒரு நாள் கூட்டம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஒன்றிய அரசினுடைய ஊடகத் தகவல் மையம் இதைப்பற்றி ஊடகங்களுக்கு ஒரு செய்தியாகக் கூட அறிவிக்கவில்லை. நாடாளுமன்ற மக்களவை விதிகளின்படி எந்த ஒரு சட்டத்தையும் அறிமுகப்படுத்து வதற்கு இருநாள்களுக்கு முன்பு அந்த வரைவுச் சட்டத்தை அனுப்ப வேண்டும். இந்த இரண்டு நாள்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்ட வரைவைப் படித்து, திருத்தங்களையும் எதிர்ப்பினையும் தெரிவிப் பதற்கு வாய்ப்பு வழங்கப்படும். ஆனால் 10 விழுக்காட்டு இடஒதுக்கீடு சட்ட வரைவை செவ்வாய்கிழமை (ஜனவரி 8) வரை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்படவில்லை. ஜனவரி 8ஆம் நாள் 11 மணி அளவில் முற்பட்ட வகுப்பில் உள்ள ஏழைப் பிரிவினருக்குக் கல்வி, வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு சட்டம் வருகின்றதா? என்று கேள்வி எழுப்பப்பட்ட போது இக்குறிப்பிட்ட சட்டவரைவைக் கையாளும் அமைச்சகம் ஒன்றிய அரசிற்கு அது போன்று எவ்வித எண்ணமும் இல்லை என்று பதிலளித்தது. ஆனால் அதே நாள் பகல் 12.46 மணிக்கு இந்தச் சட்ட வரைவின் படிகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. பொதுவாக நாடாளுமன்ற மரபுப்படி நிலைக்குழுக்குத்தான் இது போன்ற சட்ட வரைவுகள் அனுப்பப்படும். இந்நிலைக்குழு தனது பரிந்துரையை நாடாளுமன்றத்திற்கு அளிக்கும் முன்பு பொது மக்களிடமிருந்தும் வல்லுநர்களிடமிருந்தும் கருத்துகளைக் கேட்கும். இத்தகைய முக்கிய அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த முன்வந்த ஒன்றிய அரசு, எவ்வித நடைமுறையையும் நாடாளுமன்ற மரபுப்படி பின்பற்றவே இல்லை. மாலை 5 மணிக்கு நாடாளுமன்ற மக்களவையில் விவாதம் தொடங்கி இரவு 10 மணிக்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்ற மேலவை ஒரு

நாள் இச்சட்ட வரைவை விவாதத்திற்காக நீடிப்பு செய்யப்பட்டாலும் அங்கும் இந்தச் சட்டம் மதியம் 2 மணிக்கே அளிக்கப்பட்டு இரவு 10 மணிக்கு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. சிறிய கட்சிகளைத் தவிர நாடாளுமன்றத்தில் மாநிலங்களவையில் அதிக எண்ணிக்கை கொண்ட கட்சிகள் ஆய்ந்து நாடாளுமன்ற நிலைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க வில்லை. ரூபாய் 8லட்சம் ஆண்டு வருமானம் 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் கூட இந்த 10விழுக்காடு இட ஒதுக்கீட்டைப் பெற முடியும் என்ற திட்டத்தை வகுத்தது யார்? எந்த நிதி வல்லுநர்? கூற முடியுமா? ஏன் இந்த அவசரம்? யாரை ஏமாற்றா.

நோபல் பரிசு பெற்ற அமர்தியா சென் பொதுப்பிரிவில் பொருளா தாரத்தில் பின்தங்கிய முற்பட்ட சமூகத்திற்கு இடஒதுக்கீடு அளிக்கும் அரசமைப்புச் சட்டத்திருத்தம் குழப்பம் செய்வதற் காகவே உருவாக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்திலும் அரசியல் தளத்திலும் அதிர்ச்சித் தரும் வினாக்களை எழுப்புகிறது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் சென் பொருளாதாரத்தில் இந்தியா உயர்வளர்ச்சியை அடைந்து வருகிறது என்று கூறப்பட்டாலும் அனைவருக்கும் கல்வி, மக்கள் நல்வாழ்வு, வறுமையை, ஒழிப்பு ஏற்றத்தாழ்வுகளைக் களைதல், வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல் ஆகியவற்றில் அத்தகைய வளர்ச்சியை உண்மை யில் காண முடியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பல மொழிகள், இனங்கள், பல்வேறு சாதிகள் அடங்கிய ஒவ்வொரு மாநிலத்திற்கும் முற்றிலும் வேறுபட்ட சமூக அமைப்பு கள் கொண்ட இந்திய நாட்டில் உயர்வகுப்பினருக்குப் பொருளா தார அடிப்படையில் 10 விழுக்காட்டு இடஒதுக்கீடு அளிப்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தையே அவமதிக்கும் செயலாகும். சான்றாக 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை புள்ளிவிவரங்கள் தலித் பழங்குடியின மக்களின் எழுத்தறிவு, விளக்குகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் பிற்படுத்தபட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மக்கள் தொகையின் அளவு மாறுபடுகிறது. இவ்விதம் இருக்கும்போது 10 விழுக்காடு உயர்ந்த வகுப்பினர் என்று இந்தியா முழுவதற்கும் ஒரு சரிசம அளவைப் பின்பற்றுவது படுமோசமான அயோக்கியத்தனம் ஆகும். மக்களாட்சி முறையை இழிவுப்படுத்தும் செயலாகும். இதரப் பின்தங்கியோர் குறித்த புள்ளிவிவரங்கள் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் எடுக்கப்படாததால் புள்ளிவிவரங்கள் இல்லை. இதரப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் புள்ளி விவரங்களைக் கணக்கெடுக்காதது சமூக நீதிக்கு எதிராகப் புது தில்லி ஏகாதிபத்திய அரசின் உயர்பதவிகளில் உள்ள உயர்சாதியினர் செய்த திட்டமிட்ட சதியே ஆகும். இந்தப் புள்ளிவிவரம் வந்துவிட்டால் பிற்படுத்தப் பட்டோர்க்கு 40-50 விழுக்காடு அளவிற்கு இடஒதுக்கீட்டை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும்.

அடுத்ததாக இந்தியப் பொருளாதாரக் கட்டமைப்பில் பின் தங்கியோரும், தலித், பழங்குடியின மக்களும்தான் இன்றளவும் குறைந்த ஊதியத்திலும் குறைந்த வருவாயிலும் உள்ளனர் என்பதைத்திட்டமிட்டு ஆதிக்கச் சாதியினரால் மறைக்கப்பட்டு வரும் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களைப் பற்றி அறிய ஒன்றிய அரசின் திட்டக்குழு டெண்டுல்கர் என்கிற பொருளாதார அறிஞர் தலை மையில் ஒரு குழுவினை 2011இல் அமைத்தது. அக்குழு நகர்ப்புற, கிராமப்புற மக்களின் அன்றாட வருமானத்தை உரிய முறையில் எடுத்துக்காட்டவில்லை என்று கடும் விமர்சனம் வந்தது. டெண்டுல்கர் நகர்ப்புறத்தில் ரூ.33க்குக் குறைவாகச் செலவிடும் தனிநபரும் ஊர்ப்புறத்தில் ரூ.27க்குக் குறைவாகச் செலவிடும் தனிநபரும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்கள் என்று குறிப்பிட்டார். இதைத்தொடர்ந்து மன்மோகன் சிங் அரசில் பொருளாதார ஆலோசகராகப் பணியாற்றிய சி.ரங்கராசன் தலைமையில் ஒரு குழு 2013இல் அமைக்கப்பட்டது. இக்குழு 2014இல் புள்ளிவிவரங்களை வெளியிட்டது. இக்குழுவின் அறிக்கையின்படி நகர்ப்புறத்தில் ரூ.47க்குக் குறைவாகச் செலவிடும் தனிநபரும் ஊர்ப்புறத்தில் ரூ.32க்குக் குறைவாகச் செலவிடும் தனிநபரும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவர் களாகக் கணக்கிட்டது. உலகளவில் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களில் ஒரு அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ரூபாய் 71) வருமானத்தை ஒரு தனிநபர் ஒரு நாளில் பெறவில்லை என்றால் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கிறார் என்று அளவீடு செய்தனர். அதன்படி 51 விழுக்காடு இந்திய மக்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு பல அரசு அமைப்புகளும் தனியார் ஆய்வு அமைப்பு களும் குறிப்பிட்ட புள்ளிவிவரங்களின்படி மேற்கூறிய 51 விழுக்காட்டு மக்களில் 90 விழுக்காட்டு மக்கள் பிற்படுத்தப்பட்ட, தலித், பழங்குடியின மக்கள்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் கல்வியிலும் சமூகத்திலும் காலம் காலமாக பின்தங்கியிருந்ததால் தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம் கல்வியில் சமூகத்தில் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

மண்டல் குழுவின் பரிந்துரையை 1989இல் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் நிறைவேற்றினார். இவரை எதிர்த்து வாக் களித்தவர்கள்தான் இன்றைய ஆளும் பாஜகவினர் என்பதை மறந்துவிட முடியாது. இவர்கள் செய்த தடைகளின் காரணமாகக் காங்கிரசின் பிரதமராக இருந்த நரசிம்மராவ் 1994இல் இடஒதுக்கீட்டை அரசு அரசு உதவி பெறும் அமைப்புகளில் 27 விழுக்காட்டை அளித்தார்.பல ஆண்டுகளுக்குப் பின்னர் 2004இல் மன்மோகன் சிங் தலைமையில் அமையப்பெற்ற அரசில் திமுக தலைவர் கலைஞர் 27 விழுக்காட்டு இடஒதுக்கீட் டைப் பின்தங்கிய சமூகத்தினருக்கு ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்களிலும் உடனடியாக அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இதன் தொடர்பாக ஒரு மடலையும் அன்றைய பிரதமருக்கு எழுதினார்.

தமிழ்நாடு திட்டக்குழுவின் துணைத்தலைவர் என்ற முறையில் சட்ட வல்லுநர்களுடன் கலந்து அம்மடலை இறுதி செய்து முதல்வருக்கு அனுப்பினேன். அக்கருத்தை முதல்வர் கலைஞர் அப்படியே ஏற்றார். இதன் தொடர்ச்சியாக அன்றைக்கு ஒன்றிய அரசின் நிருவாகச் சீர்த்திருத்த ஆணையத்தின் தலைவராக இருந்த வீரப்ப மொய்லியை தில்லியில் தமிழக

## தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை - மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011

| மாநிலம் | | குடும்பங்களின் எண்ணிக்கை | மக்கள் தொகை | ஆண் | பெண் | குழந்தை (0-6) | கல்வி அறிவு % | பாலின விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| - | இந்தியா | 41,694,863 | 201,378,372 | 103,535,314 | 97,843,058 | 14.50% | 66.07 | 945 |
| 1 | உத்திர பிரதேசம் | 7,375,437 | 41,357,608 | 21,676,975 | 19,680,633 | 16.81% | 60.89 | 908 |
| 2 | மேற்கு வங்காளம் | 4,861,303 | 21,463,270 | 11,003,304 | 10,459,966 | 11.91% | 69.43 | 951 |
| 3 | தமிழ்நாடு | 3,591,953 | 14,438,445 | 7,204,687 | 7,233,758 | 11.02% | 73.26 | 1004 |
| 4 | ஆந்திர பிரதேசம் | 3,429,973 | 13,878,078 | 6,913,047 | 6,965,031 | 11.17% | 62.28 | 1008 |
| 5 | பீகார் | 3,073,109 | 16,567,325 | 8,606,253 | 7,961,072 | 21.02% | 48.65 | 925 |
| 6 | மகாராஷ்டிரா | 2,898,245 | 13,275,898 | 6,767,759 | 6,508,139 | 12.20% | 79.66 | 962 |
| 7 | மத்திய பிரதேசம் | 2,402,342 | 11,342,320 | 5,908,638 | 5,433,682 | 15.51% | 66.16 | 920 |
| 8 | ராஜஸ்தான் | 2,279,366 | 12,221,593 | 6,355,564 | 5,866,029 | 16.60% | 59.75 | 923 |
| 9 | கர்நாடகா | 2,178,501 | 10,474,992 | 5,264,545 | 5,210,447 | 12.97% | 65.33 | 990 |
| 10 | பஞ்சாப் | 1,717,888 | 8,860,179 | 4,639,875 | 4,220,304 | 12.80% | 64.81 | 910 |
| 11 | ஒரிசா | 1,669,787 | 7,188,463 | 3,617,808 | 3,570,655 | 13.26% | 69.02 | 987 |
| 12 | ஹரியானா | 992,096 | 5,113,615 | 2,709,656 | 2,403,959 | 14.87% | 66.85 | 887 |
| 13 | குஜராத் | 817,281 | 4,074,447 | 2,110,331 | 1,964,116 | 12.13% | 79.18 | 931 |
| 14 | ஜார்கண்ட் | 753,644 | 3,985,644 | 2,043,458 | 1,942,186 | 18.29% | 55.89 | 950 |
| 15 | சட்டீஸ்கர் | 749,457 | 3,274,269 | 1,641,738 | 1,632,531 | 15.47% | 70.76 | 994 |
| 16 | கேரளா | 725,582 | 3,039,573 | 1,477,808 | 1,561,765 | 9.43% | 88.73 | 1057 |
| 17 | டெல்லி | 527,307 | 2,812,309 | 1,488,800 | 1,323,509 | 12.79% | 78.89 | 889 |
| 18 | அசாம் | 468,568 | 2,231,321 | 1,145,314 | 1,086,007 | 13.29% | 76.99 | 948 |
| 19 | உத்தரகாண்ட் | 363,305 | 1,892,516 | 968,586 | 923,930 | 15.20% | 74.41 | 954 |
| 20 | ஹிமாச்சல பிரதேசம் | 358,212 | 1,729,252 | 876,300 | 852,952 | 12.54% | 78.92 | 973 |
| 21 | ஜம்மு-காஷ்மீர் | 183,020 | 924,991 | 486,232 | 438,759 | 13.70% | 70.16 | 902 |
| 22 | திரிபுரா | 154,112 | 654,918 | 334,370 | 320,548 | 11.77% | 89.45 | 959 |
| 23 | புதுச்சேரி | 45,409 | 196,325 | 95,512 | 100,813 | 11.71% | 77.90 | 1056 |
| 24 | சண்டிகர் | 40,694 | 199,086 | 106,356 | 92,730 | 13.32% | 76.45 | 872 |
| 25 | மணிப்பூர் | 20,349 | 97,328 | 48,863 | 48,465 | 12.92% | 76.09 | 992 |
| 26 | சிக்கிம் | 5,930 | 28,275 | 14,454 | 13,821 | 12.44% | 77.54 | 956 |
| 27 | கோவா | 5,545 | 25,449 | 12,627 | 12,822 | 10.44% | 83.73 | 1015 |
| 28 | மேகாலயா | 3,533 | 17,355 | 9,157 | 8,198 | 13.66% | 68.57 | 895 |
| 29 | தாதாநகர் ஹாவேலி | 1,353 | 6,186 | 3,339 | 2,847 | 12.42% | 89.42 | 853 |
| 30 | டாமன் டயு | 1,288 | 6,124 | 3,151 | 2,973 | 9.98% | 92.56 | 944 |
| 31 | மிசோரம் | 274 | 1,218 | 807 | 411 | 9.93% | 92.43 | 509 |
| 32 | அருணாச்சல பிரதேசம் | - | - | - | - | - | - | - |
| 33 | நாகலாந்து | - | - | - | - | - | - | - |
| 34 | இலக்க தீவுகள் | - | - | - | - | - | - | - |
| 35 | அந்தமான்-நிக்கோபார் தீவுகள் | - | - | - | - | - | - | - |

## பழங்குடியினர் எண்ணிக்கை - மக்கள் தொகை கணக்கெடுப்பு 2011

| மாநிலம் | | குடும்பங்களின் எண்ணிக்கை | மக்கள் தொகை | ஆண் | பெண் | குழந்தை (0-6) | கல்வி அறிவு % | பாலின விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| - | இந்தியா | 21,511,528 | 104,545,716 | 52,547,215 | 51,998,501 | 16.01% | 58.95% | 990 |
| 1 | மத்திய பிரதேசம் | 3,122,061 | 15,316,784 | 7,719,404 | 7,597,380 | 18.46% | 50.55% | 984 |
| 2 | ஒரிசா | 2,163,110 | 9,590,756 | 4,727,732 | 4,863,024 | 15.86% | 52.24% | 1029 |
| 3 | மகாராஷ்டிரா | 2,156,957 | 10,510,213 | 5,315,025 | 5,195,188 | 14.78% | 65.73% | 977 |
| 4 | ராஜஸ்தான் | 1,787,715 | 9,238,534 | 4,742,943 | 4,495,591 | 18.40% | 52.80% | 948 |
| 5 | சட்டீஸ்கர் | 1,743,277 | 7,822,902 | 3,873,191 | 3,949,711 | 15.33% | 59.09% | 1020 |
| 6 | குஜராத் | 1,699,510 | 8,917,174 | 4,501,389 | 4,415,785 | 15.85% | 62.48% | 981 |
| 7 | ஜார்கண்ட் | 1,699,215 | 8,645,042 | 4,315,407 | 4,329,635 | 16.97% | 57.13% | 1003 |
| 8 | ஆந்திர பிரதேசம் | 1,417,289 | 5,918,073 | 2,969,362 | 2,948,711 | 13.03% | 49.21% | 993 |
| 9 | மேற்கு வங்கம் | 1,160,069 | 5,296,953 | 2,649,974 | 2,646,979 | 13.17% | 57.93% | 999 |
| 10 | கர்நாடகா | 875,742 | 4,248,987 | 2,134,754 | 2,114,233 | 13.19% | 62.08% | 990 |
| 11 | அசாம் | 755,194 | 3,884,371 | 1,957,005 | 1,927,366 | 14.12% | 72.06% | 985 |
| 12 | மேகாலயா | 460,775 | 2,555,861 | 1,269,728 | 1,286,133 | 19.86% | 74.53% | 1013 |
| 13 | நாகலாந்து | 334,967 | 1,710,973 | 866,027 | 844,946 | 14.86% | 80.04% | 976 |
| 14 | ஜம்மு-காஷ்மீர் | 260,401 | 1,493,299 | 776,257 | 717,042 | 20.30% | 50.56% | 924 |
| 15 | திரிபுரா | 257,119 | 1,166,813 | 588,327 | 578,486 | 15.03% | 79.05% | 983 |
| 16 | பீகார் | 251,749 | 1,336,573 | 682,516 | 654,057 | 18.70% | 51.08% | 958 |
| 17 | மணிப்பூர் | 214,636 | 1,167,422 | 588,279 | 579,143 | 13.21% | 72.58% | 984 |
| 18 | மிசோரம் | 209,154 | 1,036,115 | 516,294 | 519,821 | 15.50% | 91.51% | 1007 |
| 19 | தமிழ்நாடு | 196,373 | 794,697 | 401,068 | 393,629 | 13.08% | 54.34% | 981 |
| 20 | உத்திரப்பிரதேசம் | 187,688 | 1,134,273 | 581,083 | 553,190 | 18.21% | 55.68% | 952 |
| 21 | அருணாச்சலபிரதேசம் | 176,394 | 951,821 | 468,390 | 483,431 | 15.86% | 64.58% | 1032 |
| 22 | கேரளா | 119,788 | 484,839 | 238,203 | 246,636 | 11.23% | 75.81% | 1035 |
| 23 | இமாச்சல பிரதேசம் | 80,678 | 392,126 | 196,118 | 196,008 | 12.22% | 73.64% | 999 |
| 24 | உத்தரகாண்ட் | 51,888 | 291,903 | 148,669 | 143,234 | 11.84% | 73.88% | 963 |
| 25 | சிக்கிம் | 44,299 | 206,360 | 105,261 | 101,099 | 10.62% | 79.74% | 960 |
| 26 | தாதா நகர் ஹாவேலி | 32,640 | 178,564 | 88,844 | 89,720 | 16.01% | 61.85% | 1010 |
| 27 | கோவா | 32,067 | 149,275 | 72,948 | 76,327 | 9.99% | 79.14% | 1046 |
| 28 | இலக்க தீவுகள் | 10,665 | 61,120 | 30,515 | 30,605 | 11.54% | 91.70% | 1003 |
| 29 | அந்தமான்-நிக்கோபார் தீவுகள் | 6,910 | 28,530 | 14,731 | 13,799 | 13.47% | 75.58% | 937 |
| 30 | டாமன் டயூ | 3,198 | 15,363 | 7,771 | 7,592 | 11.54% | 78.79% | 977 |
| 31 | பஞ்சாப் | - | - | - | - | - | - | - |
| 32 | சட்டீஸ்கர் | - | - | - | - | - | - | - |
| 33 | ஹரியானா | - | - | - | - | - | - | - |
| 34 | டெல்லி | - | - | - | - | - | - | - |
| 35 | புதுச்சேரி | - | - | - | - | - | - | - |

முதல்வர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இக்கட்டுரையாசிரியர் சந்தித்து 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை உடனடியாக உறுதி செய்ய வலியுறுத்தினார்.

உயர்கல்வி நிறுவனங்களான இந்தியத் தொழில்நுட்பக் கழகம், இந்திய மேலாண்மை கழகம், ஆகியவற்றில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று வீரப்பமொய்லி உறுதிக்கூறினார். ஒன்றிய அரசின் உயர்க்கல்வி நிறுவனங்களில் 27 விழுக்காட்டின் அடிப்படையில் மாணவர்கள் சேர்வதால் அதற்குரிய கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். அதற்குரிய நிதியுதவியை ஒன்றிய அரசு அளிக்க ஆணையம் பரிந்துரை செய்ய முன் வந்துள்ளது. இதை ஒன்றிய அரசின் அமைச்சரவையும் ஒப்புக்கொண்டு அதிக நிதியை ஒதுக்கியது. எனவே முதலாண்டில் 9 விழுக்காடு தொடங்கி மூன்றாம் ஆண்டில் 27 விழுக்காடு உயர்ந்துவிடும் என்று வீரப்ப மொய்லி தமிழ்நாடு அரசின் சார்பில் சென்றிருந்த இக்கட்டுரை ஆசிரியரிடம் குறிப்பிட்டார். அதனடிப்படையிலேயே கல்வி நிறுவனங்களில் 27 விழுக்காடு இடஒதுக்கீடு 2011இல்தான் முழுமையாக நடைமுறைக்கு வந்தது. மோடி தலைமையிலான ஒன்றிய அரசு ஏற்கனவே கல்வி, பொதுச் சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீட்டைக் கடந்த நான்காண்டுகளில் குறைத்துள்ளது. காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டையும் கடந்த நான்கு ஆண்டுகளில் 50 விழுக்காடு அளவிற்குக் குறைத்துள்ளது. இதன்காரணமாக பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் வருமானம் குறைந்து ஏற்றத்தாழ்வு பெருகியுள்ளது என்பதைப் பல புள்ளிவிரங்கள் சுட்டுகின்றன.

இந்த 10 விழுக்காட்டு இடஒதுக்கீட்டுச் சலுகையை உயர் சாதியினரில் 1 விழுக்காட்டிற்கு குறைவானவரே பலன்களையும் பயன்களையும் அடைவர். வருமான வரம்பு உறுதி செய்வதற்கு ஆண்டுக்கு 8 இலட்சம் வருமானமும் 5 ஏக்கர் நிலமும் என்று வரையறை செய்திருப்தால் இப்பிரிவில் உள்ள பணக்காரர்களுக்கே இச்சலுகை போய் சேரும். இந்தியப் பொருளதார கண்காணிப்பு மையம் (Centre for Monitoring Indian Economy-CMIE) 2018இல் வேலைவாய்ப்பு இந்தியாவில் குறைந்து வருவதைப் புள்ளிவிவரங்கள் அடிப்படையில் ஆய்வு செய்து வெளியிட்டுள்ளது. 2017இல் வேலைவாய்ப்பு கிடைப்பதில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. 2018இல் 7.4 விழுக்காடு வேலைவாய்ப்பு குறைந்து விட்டது. வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 2017 இலிருந்து 2018 வரை ஒரே ஆண்டில் ஒரு கோடியே 10 லட்சம் பேர் ஆகும். இவ்வித கொடுமை கடந்த 10 ஆண்டுகளில் நடைபெறவேஇல்லை. பொருளாதாரத்தில் நலிந்தவர்கள் இடையில் 82% விழுக்காடு ஊரகப் பகுதியில் வாழ்பவர்கள் வேலையிழந்துள்ளனர். இதில் பெண்கள் 80 விழுக்காடாகும். தற்காலிகப் புள்ளிவிபரங்கள் அடிப்படையில் இந்தக் கணக்கீடு செய்யப்பட்டாலும் இறுதி செய்யப்பட்ட புள்ளிவிவரங்கள் வெளிவந்தாலும் இந்தப் போக்கில் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்று பொருளாதாரக் கண்காணிப்பு மையம் எச்சரித்துள்ளது.

உலக சமூகக் கண்ணோட்டம்- வேலைவாய்ப்பு அறிக்கையில் (World Employment and Social Outlook Trends: 2018), பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ( International Labour

## அரசுத் துறைகள், இரயில்வே, மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் நிட்டி ஆயோக் ஆகியவற்றில் குரூப் ஏ, பி பணியிடங்களில் இட ஒதுக்கீடுப் பிரதிநித்துவம்

| அரசு | மொத்தம் | தாழ்த்தப்பட்டோர் | பழங்குடியினர் | இதரப்பிற்பட்டோர் | பொது |
|---|---|---|---|---|---|
| இரயில்வே | 16381 | 2551 (15.57%) | 1238 (7.56%) | 1319 (8.05%) | 11273 (68.82%) |
| 71 துறைகள் | 343777 | 52487 (15.27%) | 23488 (6.83%) | 51384 (14.94%) | 216408 (62.95%) |
| மனிதவள மேட்பாட்டு அமைச்சகம் | 665 | 126 (18.94%) | 43 (6.47%) | 56 (8.42%) | 440 (66.17%) |
| அமைச்சரவை செயலகம் | 162 | 15 (9.26%) | 2 (1.23%) | 15 (9.26%) | 130 (80.25%) |
| நிட்டி ஆயோக் | 344 | 47 (13.66%) | 17 (4.94%) | 26 (7.56%) | 254 (73.84%) |
| குடியரசுத் தலைவரின் செயலகம் | 130 | 18 (13.85%) | 5 (3.85%) | 10 (7.69%) | 97 (74.62%) |
| துணைக் குடியரசுத் தலைவரின் செயலகம் | 13 | 2 (15.85%) | 0 | 1 (7.69%) | 10 (76.92%) |
| மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் | 105 | 20 (19.05%) | 5 (4.76%) | 12 (11.43%) | 68 (64.76%) |
| தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் | 31115 | 5369 (17.26%) | 2411 (7.75%) | 2563 (8.24%) | 20782 (66.79%) |

சான்று : மத்திய பணியாளர் மற்றும் பயிற்சித் துறை மனிதவளமேம்பாட்டு அமைச்சகம் இரயில்வே கீழ்நிலை இணைப்பு அலுவலகங்கள்.

## பெரிய வங்கிகள் மற்றும் பொதுத் துறை வங்கிகளில் அலுவலர்களிடையே இட ஒதுக்கீட்டு பிரதிநிதித்துவம்

| வங்கி | மொத்தம் | தாழ்த்தப்பட்டோர் | பழங்குடியினர் | இதரப்பிற்பட்டோர் | பொது |
|---|---|---|---|---|---|
| இந்திய மாநில வங்கி | 108875 | 19221(17.65%) | 8712(8%) | 19339(17.76%) | 61603(56.68%)* |
| பஞ்சாப் தேசிய வங்கி | 28772 | 6200(21.54%) | 2267(7.88%) | 4669(16.23%) | 15636(54.34%) |
| சிண்டிகேட் வங்கி | 17317 | 2968(17.14%) | 1380(7.97%) | 4378(25.28%) | 8591(49.61%) |
| இந்தியன் வங்கி | 11098 | 2362(21.28%) | 858(7.73%) | 3224(29.05%) | 4654(41.93%) |
| மத்திய வங்கி | 17110 | 3135(18.32%) | 1495(8.74%) | 3904(22.82%) | 8576(50.12%) |
| ஐடிஐபிஐ | 15704 | 2273(14.74%) | 948(6.04%) | 3963(25.24%) | 8520(54.25%) |
| இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | 14522 | 2534(17.45%) | 1330(9.16%) | 3826(26.35%) | 6832(47.05%) |
| அலகாபாத் வங்கி | 13869 | 2642(19.05%) | 1160(8.36%) | 3203(23.09%) | 6864(49.49%) |
| யுகோ வங்கி | 12397 | 2148(17.33%) | 1053(8.49%) | 2303(18.58%) | 6893(55.60%) |
| ஆந்திர வங்கி | 11759 | 2064(17.55%) | 1034(8.79%) | 2942(25.02%) | 5719(48.64%) |
| விஜயா வங்கி | 8229 | 1497(18.19%) | 627(7.62%) | 2006(24.38%) | 4099(49.81%) |
| மகாராஷ்டிரா வங்கி | 6783 | 1030(15.16%) | 523(7.71%) | 1470(21.67%) | 3760(55.43%) |
| பஞ்சாப் மற்றும் சிந்து வங்கி | 6511 | 1207(18.54%) | 501(7.69%) | 1410(21.66%) | 3393(52.11%) |
| | | | | ரூ.1769 முன்னாள் படைவீரர்கள் உள்ளிட்டது | |
| **மைய வங்கி காப்பீட்டாளர்** | | | | | |
| ரிசர்வ் வங்கி | 6909 | 1032(14.93%) | 436(6.31%) | 954(13.81%) | 4486(64.94%) |
| எல்.ஐ.சி | 55633 | 9606(17.27%) | 4123(7.41%) | 5235(9.41%) | 36669(65.91%) |
| **பெரிய பொதுத்துறை நிறுவனங்கள்** | | | | | |
| ஓன்ஜசி | 20658 | 3412(16.52%) | 1872(9.07%) | 3431(16.61%) | 11942(57.81%) |
| ஸ்டீல் ஆணையம் இந்தியா லிமிடெட் (SAIL) | 43717 | 8419(19.26%) | 4542(10.39%) | 6263(14.37%) | 24473(55.98%) |
| இந்தியன் ஆயில் | 23106 | 3829(16.57%) | 1883(8.15%) | 3834(16.59%) | 12560(54.36%) |
| தேசிய அலுமினியம் கம்பெனி லிமிடெட் (NALCO) | 4517 | 761(16.85%) | 750(16.60%) | 398(8.81%) | 2608(57.74%) |
| முழு தேசிய தெர்மல் பவர் கார்ப்பரேசன் லிமிடெட் (NTPC) | 20879 | 3123(14.96%) | 1382(6.62%) | 3901(18.68%) | 11473(54.95%) |
| பவர் கிரிட் கார்ப்பரேசன் | 6410 | 885(13.80%) | 451(7.04%) | 1375(21.45%) | 3699(57.70%) |
| ஆயில் இந்தியா லிமிடெட் | 1638 | 216(13.19%) | 145(8.85%) | 383(23.38%) | 894(54.58%) |
| பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் | 5805 | 1068(18.40%) | 351(6.05%) | 1329(22.89%) | 3050(52.54%) |
| கேஸ் ஆணையம் இந்தியா லிமிடெட் (GAIL) | 3762 | 602(16%) | 263(4.77%) | 726(19.30%) | 2171(57.70%) |
| தேசிய கட்டுமான கட்டமைப்பு கழகம் ; (NBCC) | 985 | 169(17.16%) | 47(4.77%) | 175(17.77%) | 594(60.30%) |
| கப்பல் போக்குவரத்துக் கழகம் | 612 | 120(19.61%) | 48(7.84%) | 95(15.52%) | 339(55.39%) |

அனைத்துக் குழு ஊழியர்கள் சான்று: இந்திய ரிசர்வ் வங்கி ஆயுள் காப்பீட்டு நிறுவனம், மாநில அரசுகள் நடத்தும் 13 வங்கிகள் 11 பொதுத் துறை வங்கிகள் ஆகியவற்றிலிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டப்படிப் பெறப்பட்டது.

Organisation -ILO) ஐந்தில் ஒரு பங்குக்குக் குறைவானவர்கள் நிலையான வேலைவாய்ப்பினைப் பெற்று நிரந்தரமான ஊதியம் பெருகிறார்கள்; 5 இல் இரண்டு பங்கினர் குறைவான ஊதியம் பெறுகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அஜிம் பிரேம்ஜி பல்கலைக் கழகம் தனது ஆய்வில் நிலையான வேலை வாய்ப்பினைப் பெறும் மக்கள் தொகையில் குறைந்த கூலியைப் பெறுவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இதில் அமைப்பு சாராத் தொழிலாளர்கள்படும் துயரத்தைச் சொல்லத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் வேலைவாய்ப்பைப் பெருக்கும் முயிற்சியில் எவ்வித அதிரடி நடவடிக்கையும் எடுக்காத மோடி அரசு, இந்த 10 விழுக்காடு இடஒதுக்கீட்டை அளித்து கல்வி, வேலைவாய்பினை அளிப்போம் என்பது மோசடியில் பெரும் மோசடியாகும்.

ஒன்றிய அரசு உடனடியாக 10 விழுக்காட்டு இடஒதுக்கீட்டை மாநிலங்களும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவது ஒரு சர்வாதிகார அராஜகச் செயலாகும். மாநில உரிமைகளைப் பறிக்கும் செயலாகும். ஒன்றிய அரசின் வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்டோருக்கும், தலித், பழங்குடியின ருக்கும் உரிய இட ஒதுக்கீடு அளிக்கப்படவில்லை. ஆண்டிற்கு 4.5 இலட்சம் வருமானம் ஈட்டும் குடும்பத்தைச் சார்ந்தவர் களுக்கு (தற்போது ரூ. எட்டு லட்சம்) கல்வி, வேலை வாய்ப்பு களில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டிற்குத் தகுதியானவர்கள் என்ற பொருளாதார அளவுகோளைப் புகுத்தியதால் கடந்த 25 ஆண்டுகள் முழுமையான முறையில் 27 விழுக்காடு இடஒதுக் கீட்டைப் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒன்றிய அரசு வழங்கவில்லை. இதை அட்டவணையில் உள்ள புள்ளி விவரங் கள் மெய்ப்பித்துவிட்டன.

## பேராசிரியர்களுக்கான இதரப் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு : ஏதுமில்லை

## அனைத்து 40 பல்கலைக்கழகங்களிலும் இட ஒதுக்கீடு பிரதிநிதித்துவம்:

**பேராசிரியர்கள்**

| | |
|---|---|
| மொத்தம் | 1125 |
| தாழ்த்தப்பட்டோர் | 39 (3.47%) |
| பழங்குடியினர் | 8 (0.7%) |
| இதரப் பிற்படட்டோர் | 0 |
| பொது | 1071 (95.2%) |

**இணைப்பேராசிரியர்கள்**

| | |
|---|---|
| மொத்தம் | 2620 |
| தாழ்த்தப்பட்டோர் | 130 (4.96%) |
| பழங்குடியினர் | 34 (1.30%) |
| இதர பிற்பட்டோர் | 0 |
| பொது | 2434 (92.90%) |

**உதவிப் பேராசிரியர்கள்**

| | |
|---|---|
| மொத்தம் | 7741 |
| தாழ்த்தப்பட்டோர் | 931 (12.02%) |
| பழங்குடியினர் | 423 (5.46%) |
| இதரப் பிற்பட்டோர் | 1113 (14.38%) |
| பொது | 5130 (66.27%) |

**ஆசிரியரில்லாத ஊழியர்கள்**

| | |
|---|---|
| மொத்தம் | 5835 |
| தாழ்த்தப்பட்டோர் | 523 (8.96%) |
| பழங்குடியினர் | 248 (4.25%) |
| இதரப் பிற்பட்டோர் | 694 (10.17%) |
| பொது | 4443 (76.14%) |

மாற்றுத்திறனாளி இனம் சேர்க்கப்படவில்லை

சான்று: ஏப்ரல்1 2018 வரை பல்கலைக்கழக மானியக்குழு இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டவை.

மேற்கூறிய புள்ளிவிவரங்களின்படி உயர்சாதியினர் தான் 50 விழுக்காட்டிற்கு மேல் ஒன்றிய அரசின் கல்வி வேலை வாய்ப்புகளில் பெற்றுள்ளனர். நீட் போன்ற தேர்வுகளை நடத்தி மாநிலங்கள் தங்களின் பொதுச் செலவில் உருவாக்கிய அரசு மருத்துவக் கல்லூரிகளில் அதிக உயர்சாதியினரும் வடநாட்டி னரும் சேர்ந்திருப்பது மாநிலங்கள் உரிமைகள் மீதும் மாநிலங் களின் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் மீதும் வீழ்ந்துள்ள பேரிடியாகும். இந்த அநீதிகளைத் துடைப்பதற்குப் பதிலாக ஒன்றிய அரசு மேலும் 10 விழுக்காடு உயர்சாதியினருக் கென்றால் எங்கே சமூக நீதி? யாருக்கு சமூக நீதி?

## ஆனந்தவிகடன் விருதுகள் வழங்கும் விழா



இலக்கியப் படைப்பாளிகளுக்கும் சமூக சேவர்களுக்கும் பல்வேறு விருதுகளை ஆனந்தவிகடன் குழுமம் வழங்கி வருகிறது. 2018ஆம் ஆண்டிற்கான சிறந்த கட்டுரையாளர் விருது அ.மார்க்ஸ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. தோழர் வே.ஆனைமுத்து அவர்களும் தொல் திருமாவளவன் அவர் களும் அ.மார்க்சுக்கு விருதினை வழங்கினை சிறப்பித்தனர். சென்னை நந்தம்பாக்கம் வணிக வளாகத்தில் (Trade Centre) இல் 21.01.2019 அன்று இந்த விழா நடைபெற்றது.

# பிறவிப் பெருங்கடல்

- இராமியா

இந்து மதச் சாத்திரங்கள் மக்களை வருண / சாதி ரீதியாகப் பிரித்து வைத்து உள்ளன என்பதும், அந்த வருண / சாதி ஏற்றத் தாழ்வுகள் பிறவி அடிப்படையிலேயே விதிக்கப்பட்டு உள்ளன என்பதும் மறுக்கவே மறைக்கவே முடியாத உண்மைகள். ஆனால் பார்ப்பனர்கள் "இல்லையே! வருண / சாதிப் பிரிவுகள் பிறவி அடிப்படையில் இல்லையே! அவை குணத்தின் செய்கையின் அடிப்படையில் தானே நிர்ணயிக்கப்பட்டு உள்ளன?" என்று கொஞ்சமும் கூசாமல் வாதம் செய்கின்றனர். "குணத்துக்கும் செய்கைக்கும் தக்கபடி நான் நான்கு வர்ணங் களைச் சமைத்தேன். செய்கையற்றவனும் அழிவற்றவனுமாகிய யானே அவற்றைச் செய்தேன் என்றுணர்" என்ற பகவத் கீதையின் 4வது அத்தியாயத்தின் 13வது செய்யுளை மேற்கோள் காட்டி உரக்கக் கூவுகின்றனர். பார்ப்பனர்களின் இந்த இரைச் சலுக்கு ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களில் பலர் மயங்கி / குழம்பி விடுகின்றனர். இந்த மயக்கம் குழப்பம் இருக்கும் நிலையிலேயே "வருணம் / சாதி பிறவி அடிப்படையில் இல்லாமல் குணத்தின், செய்கையின் அடிப்படையில் இருக்கும் போது இட ஒதுக்கீடு சாதி அடிப்படையில் இருப்பது தவறு" என்ற நச்சுக் கருத்தை / நச்சுச் சிந்தனையை மக்கள் மனதில் விதைக்க முற்படுகின்றனர்.

ஆனால் இந்து மதச் சாத்திரங்கள் உண்மையில் வருணத்தை / சாதியைப் பிறவி அடிப்படையில் பிரித்து வைக்காமல் குணத் தின், செய்கையின் அடிப்படையிலா பிரித்து வைத்து உள்ளன? இந்து மதச் சாத்திரங்களில் கூறப்பட்டு உள்ள சில செய்திகளைப் பார்ப்போம். மனு ஸ்மிருதியின் 2ஆம் அத்தியாயத்தின் 31வது செய்யுள் "பிராமணனுக்கு மங்களத்தையும், க்ஷத்திரியனுக்கு பலத்தையும், வைசியனுக்கு பொருளையும், சூத்திரனுக்கு தாழ்மையையும் காட்டுகிறதான பெயரை இட வேண்டியது" என்று கூறுகிறது.

நன்கு கவனித்துப் பாருங்கள். வருணம் தீர்மானிக்கப்பட்ட பின்புதான் ஒரு குழந்தைக்குப் பெயரிடும் சடங்கே நிகழ முடிகிறது. வருணம் / சாதி பிறப்பின் அடிப்படையில் இல்லாமல் குணத்தின் செய்கையின் அடிப்படையில் அமைவதாய் இருந்தால், அக்குழந்தை வளர்ந்து பெரியவனாகி, அவனுடைய குணத்தையும் செய்கையையும் கண்ட பிறகு தான் அவன் எந்த வருணத்தை / சாதியைச் சேர்ந்தவன் என்று தெரிந்து கொள்ள முடியும். ஆனால் பிறந்த உடனேயே செய்யும் பெயரிடும் சடங்கின் போதே வருணத்தை அடிப்படையாகக் கொண்டு தான் செய்ய வேண்டும் என்றால், வருணம் பிறவி அடிப்படையில் தான் அமைகிறது என்று புரிந்து கொள்ள அடிமட்ட அறிவிலியாலும் முடியுமே?

மேலும் மனு ஸ்மிருதியின் 2ஆம் அத்தியாயம் 238வது செய்யுள் "அன்புள்ளவன் மேலான வித்தையை சூத்திரனிடத்தில் இருந்தாலும், மேக்ஷ தருமத்தை சண்டாளனிடத்தில் இருந் தாலும், ஸ்த்திர ரத்தினத்தை (அதாவது அழகான, பண்புள்ள பெண்ணை) தனக்குத் தாழ்ந்த குலத்தில் இருந்தாலும் கிரகித்துக் கொள்ளலாம்" என்று கூறுகிறது. குணத்தின், செய்கையின் அடிப் படையில் தான் வருணம் அமைகிறது என்றால், மேலான வித்தையை அறிந்தவன் எப்படி சூத்திரனாக இருக்க முடியும்? மோக்ஷ தருமத்தை அறிந்தவன் எப்படி சண்டாளனாக இருக்க முடியும்? அவ்வித்தையை, அந்த அறத்தை உணர்ந்த நிலையில் அவர்களைப் பிராமணர்களாகத்தானே வகைப்படுத்த வேண்டும்? அவ்வாறு வகைப்படுத்தாமல், சூத்திரனிடத்தில் இருந்தும், சண்டாளனிடத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறி இருப்பதானது வருணம் என்பது குணத்தின், செய்கையின் அடிப்படையில் அல்ல; பிறவியின் அடிப்படையில் தான் என்பதற் கான உறுதியான சான்று அல்லவா?

இந்து மதச் சட்டங்களைச் சொல்லும் இன்னொரு சாத்திரமான பராசர ஸ்மிருதியின் 8வது அத்தியாயம் 25வது செய்யுள் "பிராமணன் இழிதொழிலினனாகவே இருக்கட்டும்; அப்போதும் அவன் வழிபடத்தக்கவன். சூத்திரன் உயரிய நற்குணங்களே உருவானவனாயினும் சரி; அவனை வழிபடலாகாது. கன்று போட்ட பசுவென்று துஷ்டத்தனம் பண்ணுகிறது; குட்டி போட்ட கழுதையொன்று சாதுவாக வீட்டில் இருக்கிறது. இவ்விரண்டில் அறிஞர் பசுவை விட்டுவிட்டுக் கழுதையைக் கறந்து பாலைக் கிரஹிப்பார்களா?" என்று கூறுகிறது.

வருணம் பிறவி அடிப்படையில் அமையாமல் குணத்தின் அடிப்படையில் அமைகிறது என்றால் இழிதெழிலினன் எப்படி பிராமணனாக இருக்க முடியும்? உயரிய நற்குணங்களே உருவானவன் எப்படி சூத்திரனாக இருக்க முடியும்?

மனு ஸ்மிருதியும், பராசர ஸ்மிருதியும் சாதாரண மக்களி டையே வெகுவாகப் புழங்காத நூல்கள். ஆனால் பகவத் கீதை மக்களிடையே வெகுவாகப் பரப்பப்பட்டு உள்ளது. கிருத்தவர் களுக்கு விவிலியம் (பைபிள்) போலவும், இஸ்லாமியர்களுக்குக் குரான் போலவும், இந்துக்களுக்கு ரிக், யஜூர், சாம, அதர்வ வேதங்களைத் தான் சொல்ல வேண்டும். ஆனால் அவற்றை இந்து மதத்தின் ஆதார நூல்களாகக் கொடுக்காமல் பார்ப்பனர்கள் பகவத் கீதையையே முன் நிறுத்திக் காட்டுகின்றனர். அத்தகைய பகவத் கீதையின் முதல் அத்தியாயம் 41வது செய்யுள் "கண்ணா! அதர்மம் சூழ்வதனால் குல ஸ்திரீகள் கெட்டுப் போகிறார்கள். விருஷ்ணி குலத் தேன்றலே, மாதர் கெடுவதனால் வர்ணக் குழப்பமுண்டாகிறது" என்று கண்ணனைப் பார்த்து அருச்சுனன் கேட்பதாக உள்ளது. மாதர் கெடுவதற்கும் வர்ணக் குழப்பம் உண்டாவதற்கும் என்ன தொடர்பு? வர்ணம் குணத்தின், செய் கையின் அடிப்படையில் அமைகிறது என்றால், அருச்சுனனின் கருத்துப்படி "கெட்டுப் போன" பெண்களுக்குப் பிறந்தவர்களின் குணத்தின், செய்கையின் அடிப்படையில் வருணத்தை முடிவு செய்ய முடியுமே? இதில் குழப்பம் ஏன் வருகிறது? ஏனென்றால் வருணம் பிறவியில் அமைவதால் தான் அருச்சுனனுக்குக் குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது.

மேலும் பகவத் கீதையின் 18வது அத்தியாம், 47வது செய்யுள் "பிறர்க்குரிய தர்மத்தை நன்கு செய்வதைக் காட்டிலும் தனக்குரிய தர்மத்தை குணமின்றிச் செய்தலும் நன்று. இயற்கையிலேற்பட்ட தொழிலைச் செய்வதனால் ஒருவன் பாவமடையமாட்டான்" என்று கூறுகிறது.

வருணம் பிறவி அடிப்படையில் அமையாமல் குணத்தின், செய்கையின் அடிப்படையில் அமைகிறது என்றால், ஒருவனால் எந்தத் தெழிலைத் திறம்படச் செய்ய முடிகிறதோ அந்தத் தொழிலுக்கு உரிய வருணத்தில் அவனை வகைப்படுத்திவிட வேண்டியது தானே? அதை விட்டு விட்டு "உன்னால் திறம்படச் செய்ய முடிந்தாலும் உனக்கு விதிக்கப்படாத அந்தத் தொழிலைச் செய்யாதே. அரைகுறையாகவே செய்ய முடிந்தாலும் உனக்கு விதிக்கப்பட்ட தொழிலையே செய்" என்று கூறினால், அவனுக்கு அந்தத் தொழில் பிறவி அடிப்படையில் தானே விதிக்கப்படுகிறது? அதாவது வருணம் / சாதி பிறவி அடிப்படையில் தானே நிர்ணயம் ஆகிறது?

வருணம் / சாதி என்பது பிறவி அடிப்படையில்தான் நிர்ணயிக் கப்படுகிறது என்பதற்கு இவ்வளவு வலுவான சான்றுகள் இந்து மத நூல்களிலும், நடைமுறையிலும் இருக்கும் போது பார்ப் பனர்கள் ஏன் மாற்றிக் கூறுகின்றனர்?

மகாத்மா புலே, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரின் போராட்டங்களுக்குப் பின், பார்ப்பனர்கள் மட்டுமே உயர் நிலை வேலைகளில் இருக்க முடியும் என்ற நிலை மாறி ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களில் சிலருக்கும் அந்த வாய்ப்புக் கிடைத்தது. இவ்வாறு வாய்ப்புப் பெற்றவர்கள் பல இடங்களில் பார்ப்னர்களைவிடத் திறமைசாலிகள் என்று மெய்ப்பித்தனர். இதனால் கிலி அடைந்து போன பார்ப்பனர்கள் சாதி எனும் கருத்தியலில் குழப்பம் விளைவிக்க வேண்டும் என்றும், அதன் மூலம் தங்கள் ஆதிக்கத்தைத் தளர விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், பல வழிகளில் சிந்தித்தனர் / சிந்திக் கின்றனர். அதில் ஒன்று தான் சாதி என்பது பிறப்பின் அடிப்படை யில் அல்ல; குணத்தின், செய்கையின் அடிப்படையில் என்ற கருத்தியலைப் பரப்புவது. இக்கருத்திற்கு வலுவூட்டி, அதன் பின் சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு முறையை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதும், அதன் பின் வழக்கம் போல் திறமைக் குறைவான பார்ப்பனர்களையும் "திறமைசாலிகள்" என்று கூறி உயர் நிலை வேலைகளில் அமர்த்துவது, ஒடுக்கப்பட்ட வகுப்பில் உள்ள திறமைசாலிகளைத் "திறமைக் குறைவானவர்கள்" என்று கூறி அவர்களுக்கு உயர் நிலை வேலைகளை மறுப்பது போன்ற உத்திகளுக்கு உராய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதும் தான் அவாளின் திட்டம்.

வருணம் / சாதி பிறவி அடிப்படையில் இல்லை என்று வெளி யில் கூறினாலும், இந்து மத நூல்களும் நடைமுறையும் அதைப் பிறவி அடிப்படையில் தான் வகைப்படுத்தி உள்ளன என்பதைப் பார்ப்பனர்கள் நன்கு அறிவார்கள். இந்தப் பிறவி எனும் பெருங்கடலைக் கடப்பதற்காக நாம் நீந்தும் முயற்சியில் ஈடுபட்டு விடக் கூடாது என்பதற்காகவே அவாள் அவ்வாறு கூறுகின்றனர். ஆனால் நாம் பிறவி அடிப்படையிலான இந்த ஒடுக்கு முறையை எதிர்த்து நீந்திக் கரை சேர்ந்தே ஆக வேண்டும். அதற்கு ஒரே வழி அனைத்துத் துறைகளிலும், அனைத்துத் தெழில்களிலும், அனைத்துப் பொருளாதார, சமூக நடவடிக்கைகளிலும், அனைத்து நிலைகளில் முற்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்டடோர், பழங்குடியினர், மத சிறுபான் மையினர் ஆகியேருக்கு அவரவர் மக்கள் தொகை விகிதத்தில் பங்கு அளிப்பதே. கயமை நிறைந்த பொதுப் பேட்டி முறையை முற்றிலும் ஒழித்து விட்டு விகிதரச்சாரப் பங்கீடு முறையைச் செயல்படுத்தினால் அந்தந்த வகுப்பில் உள்ள திறமைசாலிகள் உயர் நிலைகளிலும், அந்தந்த வகுப்பில் உள்ள திறமைக் குறைவானவர்கள் அடுத்த நிலைகளிலும் வேலை செய்யும் வாய்ப்புகளைப் பெறுவார்கள். அந்நிலையில் இப்போது உள்ள சாதி / பிறவி அடிப்படையிலான ஒடுக்குமுறை மறைந்து நாம் பிறவி எனும் பெருங்கடலை நீந்திக் கரை சேர்ந்து இருப்போம். அவ்வாறு இன்றி விகிதாச்சாரப் பங்கீடு கேட்கவில்லை என்றால் பிறவி அடிப்படையிலான சாதிய ஒடுக்கலில் அழுந்தியே இருக்க நேரிடும். பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் வகுப்புரிமை கேளாதவர்.

## சிறுநாத்தூர் நடுநிலைப்பள்ளி விழா



திருவண்ணாமலை மாவட்டம் சிறுநாத்தூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு நாளில் பள்ளி மாணவர்களுக்கு ப.வடிவேலு பரிசுகள் அளித்து வருகிறார். 28ஆவது ஆண்டாக ப.வடிவேலு 26.1.2019 அன்று பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிலும் சிறந்து விளங்கும் மாணவர் களுக்குப் பரிசுகள் அளித்தார். இந்நிகழ்ச்சி தலைமை ஆசிரியர் வேலு தலைமையில் நடைபெற்றது. உதவிக் கல்வி அலுவலர் ஸ்ரீராமுலு சிறப்புரையாற்றினார். அனைத்து மாணவர்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. பள்ளி உதவி ஆசிரியர் சு. விஜயகுமார் நன்றிகூறிட இவ்விழா நிறைவுற்றது.

# அறிவியல் மாநாடா? ஆர்.எஸ்.எஸ். மேடையா?

க. முகிலன்

அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையமைச்சராக இருந்த போதே இந்துத்துவக் கோட்பாடுகள் பல்கலைக்கழகங்களில் பாடமாக வைக்கப்பட்டன. நரேந்திர மோடி 2014இல் தலைமையமைச்சராக ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்த பின் எல்லாத் துறைகளிலும் இந்துத்துவவாதிகள் தலைமைப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டு வருகின்றனர். மோடி ஆட்சியில் வெளியிடப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையின் வரைவு அறிக்கையில் சமற்கிருத மொழியைப் பள்ளிக் கல்வி முதல் பல்கலைக் கழகம் வரை கற்பிக்கப்பட்டுப் பாரதப் பண்பாட்டைப் பேணி வளர்த்திட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இன்றுள்ள அறிவியலும் உயர் தொழில் நுட்பமும் வேத காலத்திலேயே இருந்தன. இதற்கான சான்றுகள் இந்துமத இதிகாசங்களிலும் புராணங்களிலும் இருப்பதாக இந்துத்துவவாதிகள் கூறுகின்றனர். 2015ஆம் ஆண்டு மருத்துவர்கள் மாநாட்டில் தலைமையமைச்சர் நரேந்திர மோடி பேசிய போது, “மகாபாரதத்தில் கர்ணன் பிறப்பு, அக்காலத்திலேயே சோதனைக் குழாய் முறை இருந்தது என்பதைக் காட்டுகிறது; விநாயகக் கடவுளின் யானைத் தலை பிளாஸ்டிக் அறுவை மருத்துவம் எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தது என்பதற்குச் சான்றாகும்” என்று கூறினார். மோடியின் இந்த அடாவடிப் பேச்சுக்கு அம்மாநாட்டில் இருந்த மருத்துவர் எவரும் மறுப்புக் கூறவில்லை. இந்திய மருத்துவர் சங்கமும் இதைக் கண்டிக்கவில்லை. மதச்சார்பற்ற எந்தவொரு சனநாயக நாட்டிலும் ஆட்சித் தலைமையில் இருக்கும் எவரும் மோடியைப் போல் பேசிட அனுமதிக்கப்பட மாட்டார்.

நரேந்திர மோடி இவ்வாறு பேசிய பின் சில நாள்கள் கழித்து மும்பையில் 102ஆவது இந்திய அறிவியல் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில், “சமற்கிருதத்தின் வாயிலாகப் பண்டைய இந்திய அறிவியல்” என்ற தலைப்பில் ஒரு அமர்வு நடந்தது. அந்த அமர்வில், “பண்டைக் காலத்தில் விண்ணில் பறத்தல் தொழில்நுட்பம்” என்ற தலைப்பில் ஒரு கட்டுரை படிக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டிலேயே இந்திய அறிவியல் கழகம் (IISc) கி.மு.7000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் விண்ணில் பறக்கும் தொழல்நுட்பம் இருந்தது என்று கூறப்படுவது அப்பட்டமான பொய் என்று அறிவித்திருந்தது. அப்படியிருந்தும் மும்பை அறிவியல் மாநாட்டில் இத்தலைப்பில் கட்டுரை படிக்க அனுமதிக்கப்பட்டதற்குக் காரணம் மோடியின் தலைமையிலான ஆட்சி இதே கருத்தைக் கொண்டிருப்பதே ஆகும்.

மும்பை அறிவியல் மாநாட்டில் “பண்டைய தாவரவியலில் பொறியியல் பயன்பாடு”, “யோகாவில் நரம்பியல் அறிவு”, “இந்திய அறுவை மருத்துவத்தின் வளர்ச்சிகள்” என்கிற தலைப்புகளில் கட்டுரைகள் படிக்கப்பட்டன. இக்கட்டுரைகளின் நோக்கம், இன்று வளர்ச்சி பெற்றுள்ள அறிவியல் அனைத்தும் பண்டைய இந்து சமூகத்தில் இருந்தன என்று பொய்யான பெருமிதத்தைக் காட்டிக் கொள்வதே ஆகும்.



*2018 சனவரி 3 அன்று ஜலந்தரில் அறிவியல் மாநாட்டைத் தொடக்கிவைத்த மோடி*

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் ‘லவ்லி புரொபசனல்’ எனப்படும் ஒரு தனியார் பல்கலைக்கழகத்தில் 2019 சனவரி 3 முதல் அய்ந்து நாள்கள் இந்திய அறிவியல் மாநாடு நடைபெற்றது. நேரு காலம் முதல் இந்திய அறிவியல் மாநாட்டை நாட்டின் தலைமையமைச்சரே தொடங்கி வைக்கும் மரபின் படி, ஜலந்தர் மாநாட்டை நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். இன்றைய சூழலில் அறிவியல் வளர்ச்சி குறித்தும் எதிர்காலத்தில் அது செல்லக் கூடிய திசை குறித்தும் அறிவியல் மாநாட்டில் விவாதிக்கப்படுவது வழக்கம். ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளாக அறிவியல் மாநாடு ஆர்.எஸ்.எஸ்.இன் மேடையாகவே மாற்றப்பட்டு வருகிறது.

அறிவியல் மாநாட்டில் பள்ளி மாணவர்களுக்கென்று தனியாக ஒரு அமர்வு நடத்தப்படுகிறது. இந்தியா முழுவதிலிருந்தும் தங்களுடைய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்காகப் பல மட்டப் போட்டிகளில் பங்கேற்றுத் தேர்வான இரு நூறுக்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் கலந்து கொள்வது வழக்கம். மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தையும் ஆராய்ச்சி மனப்பான்மையையும் ஊக்குவித்து, எதிர்காலத்தில் சிறந்த அறிவியலாளர்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.



ஜி. நாகேசுவரராவ் ஜெகதளா கிருட்டிணன்

ஜலந்தர் அறிவியல் மாநாட்டில் மாணவர் அமர்வின் நெறியாளர்களாக ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஜி. நாகேசுவரராவ், தமிழ்நாட்டில் ஆழியாற்றைத் தலைமை இடமாகக் கொண்டுள்ள உலக சமுதாய சேவா சங்கத்தைச் சேர்ந்த கண்ணன் ஜெகதளா கிருட்டிணன் என்பவரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். துணை வேந்தர் நாகேசுவரராவ் மாணவர்களிடையே அறிவியல் சிந்தனை பொங்கி வழிந்தோட உதிர்த்த முத்தான கருத்துகள் :

* மகாபாரதத்தில் கவுரவர்களின் தாய் காந்தாரி தன் நூறு குழந்தைகளைச் சோதனைக் குழாய் மூலம் பெற்றெடுத்தார். எனவே நாம் இவ்வுலகில் அறிவியல் விஞ்ஞானத்தின் முன்னோடிகள் என்று கூறுவதில் அய்யப்பட வேண்டாம்.

* இலங்கையில் இராவணனிடம் 24 வகையான வானூர்திகள் இருந்தன. பெரிய வானூர்தி நிலையம் இருந்தது.

* ஏவுகணைகளை ஏவுவதில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நம் நாடு முன்னோடியாகத் திகழ்ந்துள்ளது. அதனால்தான் மகாவிஷ்ணு தனது எதிரியைத் தாக்க சுதர்சன சக்கரத்தை ஏவி, அது மீண்டும் திரும்பி வரும் அளவுக்கு ஆற்றல் வாய்ந்த ஏவுகணைகளை வைத்திருந்தார்.

* விஷ்ணுவின் தசாவதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டே சார்லஸ் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை உருவாக்கப்பட்டது.

* கங்கை நீரில் பாக்டீரியா நுண்ணுயிர்களைத் தாக்கி அழிக்கும் வைரசான பாக்டீரியோ ஃபேஜ் இருப்பதால் தான் அந்நீர் தூய்மையாகவும் புனிதமாகவும் நீடிக்கிறது (ஆனால் மோடி அரசு கங்கை நீரைத் தூய்மைபடுத்த பல ஆயிரம் கோடிப் பணத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறது).

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜெகதளா கிருட்டிணன் அம்மாநாட்டில் நியூட்டனுக்கு ஈர்ப்பு விசை குறித்து மிகவும் குறைவான அறிவுதான் இருந்தது என்றும் ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாடு உலகைத் திசைதிருப்பிய தவறான கோட்பாடு என்றும் கூறினார். மேலும் இதுகுறித்து 40 நாடுகளில் உள்ள 400 பல்கலைக்கழகங்களுக்கு ஆய்வறிக்கையை அனுப்பியிருப்பதாகவும், அவர்கள் என் கோட்பாட்டைத் தவறு என்று மெய்ப்பிக்கட்டும் என்று சவால் விட்டுப் பேசினார். உலகம் முழுவதும் பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை நியூட்டன், ஐன்ஸ்டீன் கோட்பாடுகள் பாடமாகப் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. சங்பரிவார ஆட்சியில் மேடை கிடைத்துவிட்டால் எந்த அளவுக்கு அடாவடித்தனமாகப் பேசுவார்கள் என்பதற்கு ஜெகதளா கிருட்டிணன் ஒரு சான்று.

ஆர்.எஸ்.எஸ்.-பா.ச.க. தலைமையிலான ஆட்சி மேலும் நீடித்தால் கல்வி முழுவதும் எந்த அளவுக்குக் காவிமயமாகி விடும் என்பதையே ஜலந்தர் அறிவியல் மாநாடு உணர்த்துகிறது. மதச்சார்பற்ற - சனநாயக - அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க வேண்டும் என்கிற நோக்கம் கொண்ட அனைவரும் ஓரணியில் திரண்டு கல்வியும் அறிவியலும் காவிமயமாவதை எதிர்த்து முறியடிக்க வேண்டும்.

இந்தப் பகுத்தறிவுப் போரில் மோடி ஆட்சியில் சங்பரிவாரங்களால் மருத்துவர் தபோல்கர், பொதுவுடைமையாளர் கோவிந் பன்சாரே, செயற்பாட்டாளர் எம்.எம். கல்புர்கி, எழுத்தாளர் கவுரி லங்கேஷ் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். எனவே இந்துத்துவப் பாசிசத்தின் கொடிய முகத்திரையை மக்கள் மன்றத்தில் கிழித்தெறிந்து, சங் பரிவாரங்களை வீழ்த்துவதே நம் முன் உள்ள முதலாவது கடமையாகும்.

## நடிகர் மன்சூரலிகானின் "கடமான் பறை" வெளியீடு மற்றும் திரை முன்னோட்டம் வெளியீட்டு விழாவில் வே.ஆனைமுத்து அவர்களுக்குப் பாராட்டு



திரைப்பட நடிகர் மன்சூர் அலிகான் அவர்களின் "கடமான் பாறை" எனும் திரைப்பட இசை வெளியீடு மற்றும் திரை முன்னோட்டம் வெளியீட்டு விழா 03.01.2019 மாலை 6 மணிக்கு சென்னை சாலி கிராமம் பிரசாத் வண்ணக் கூடத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்கள் சீமான், சாகுல் அமீது, அருள்மொழி, முனைவர் சுந்தரவள்ளி, கலைப்புலி தாணு இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர். தோழர் வே.ஆனைமுத்து அவர்களின் சமுதாயப் பணியைப் பாராட்டி அவருக்குச் சிறப்புச் செய்யப்பட்டது.

# சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2019 வெளியீட்டு விழா
# மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு - தமிழ்வழிக் கல்வி மாநாடு

1997ஆம் ஆண்டு முதல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி தமிழ்ப் பெருமக்களின் ஆதரவுடன், பல்துறை அறிஞர்களின் சீரிய கட்டுரைகளைத் தாங்கி வரும் சிந்தனையாளன் பொங்கல் மலரை வெளியிட்டு வருகிறது. அத்தன்மையில் 22ஆவது ஆண்டாக, சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு விழா நிகழ்ச்சி, மாம்பலம் சந்திரசேகர் திருமண மண்டபத்தில் 06-01-2019 ஞாயிறு அன்று முற்பகல் 10.30 மணிக்குத் தொடங்கியது. தொடக்க நிகழ்வாகக் காஞ்சிபுரம் தோழர் உலக ஒளி புரட்சிகரப் பாடல் களைப் பாடினார்.

காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர் தாம்பரம் மா. சுப்பிரமணி வரவேற்புரை ஆற்றினார். மா.பெ.பொ.க. மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தி. துரை சித்தார்த்தன் தலைமை ஏற்று உரையாற்றினார். புலவர் செந்தலை ந. கவுதமன் பொங்கல் மலரை வெளியிட்டார். மலரின் முதல் படியைத் திருமண மண்டபத்தை இலவயமாக வழங்கி உதவிய இலக்கியச் செல்வர் மாம்பலம் ஆ. சந்திரசேகர் பெற்றுக் கொண்டார். மேலும் பொங்கல் மலர் படியைப் பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் வரகூர் மா. நாராயண சாமி, திருச்சி மாவட்டச் செயலாளர் இரா. கலியபெருமாள், நாகை மாவட்டச் செயலாளர் முத்து. அன்பழகன், சேலம் மாவட்டச் செயலாளர் செ. ஆனையப்பன், சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் பா.வை. அருண்மொழி, ஓசூர் கு. தொல்காப்பியன் ஆகியோர் பெற்றனர்.

பொங்கல் மலரின் சிறப்புகள் குறித்து புலவர் செந்தலை ந. கவுதமன் உரையாற்றினார். உருபா பத்தாயிரம் அளித்து முதல் படியைப் பெற்ற மண்டப உரிமையாளர் மாம்பலம் ஆ. சந்திரசேகர், காஞ்சி மாவட்டச் செயலாளர் சி. நடராசன், திரு வண்ணாமலை மாவட்டச் செயலாளர் பொ. சுப்பிரமணியன், வாணியம்பாடி நா. மதனகவி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இதையடுத்து மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு பகல் 12 மணிக்குத் தொடங்கியது. இம்மாநாட்டிற்கு மா.பெ.பொ.க. தலைமைக்குழு உறுப்பினர் க. முகிலன் தலைமை வகித்தார். வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி. சங்கர் வரவேற்புரை யாற்றினார். மத ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டை திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடக்கி வைத்து எழுச்சிமிகு உரையாற்றி னார். திருச்சி மாவட்ட புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றச் செயலாளர் ந. கருணாகரன், தொழிலாளரணிச் செயலாளர் சா. குப்பன், பெரியார் ஈ.வெ.ரா. - நாகம்மை அறக்கட்டளையின் செயலாளர் துரை. கலையரசு புதுவை மாநிலச் செயலாளர் இரா. திருநாவுக்கரசு, காஞ்சி மாவட்ட புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றச் செயலாளர் குறள மிழ்தன், வேலூர் மாவட்ட புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றச் செயலாளர் மு. சாமிநாதன், திருக்கழுக்குன்றம் தி.ச. குணசேகரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

பாவலர் வையவன் சிந்தனையாளன் இதழில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு நூலான 'தமிழ்க்காடு' நூலை வே. ஆனைமுத்து அவர்கள் அறிமுகம் செய்து வெளியிட, க. முகிலன் பெற்றுக்கொண்டார். முற்பகல் நிகழ்வின் இறுதியில் வேலூர் நகரச் செயலாளர் மீ. டில்லிபாபு நன்றி கூறினார்.

பகல் உணவுக்குப் பின் 3.00 மணிக்கு மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் சி. பெரியசாமி தலைமையில் தமிழ்வழிக் கல்வி மாநாடு நடைபெற்றது. வேளாண் அணிச் செயலாளர் கோ. கோதண்டராமன் வரவேற்புரை நிகழ்த்தினார். பேரா சிரியர் சோம. இராசேந்திரன் தமிழ்வழி கல்வி மாநாட்டைத் தொடக்கி வைத்து அரியதோர் உரையாற்றினார். அதன்பின் சி. பெரியசாமி தலைமை உரையாற்றினார்.

கடலூர் மாவட்டச் செயலாளர் பா. மோகன், இரா. பச்சமலை, முனைவர் சி.இரா. இளங்கோவன், வழக்குரைஞர் கீதாம்பாள், அய்தராபாத் கணித்தமிழ்ச் சங்கத்தின் மு. சிவலிங்கம், மகளிரணிச் செயலாளர் கோவி இராமலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கலசம்-கோவிராமலிங்கம் மகன் கோ.ரா.வெற்றி ஆங்கி லத்தில் மொழிபெயர்த்த "இந்திய ஒரு தேசமா?" என்கிற பெரியாரின் சொற்பொழிவு நூலை வே.ஆனைமுத்து வெளியிட ஆனை.பன்னீர்செல்வம் பெற்றுக் கொண்டார்.

மத்தியப் பிரதேசம் முனைவர் சுனிலம், தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் பொழிலன், புதுதில்லி சமூக நல்லிணக்க ஒருங்கிணைப்பாளர் இனாமுல் அசன், தன்னாட்சித் தமிழகம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆழி. செந்தில்நாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மா.பொ.பொ.க. பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து மாநாட்டு நிறைவுரை நிகழ்த்தினார். ப. வடிவேலு நன்றி நவின்றார்.

## மடல் பகுதி

அன்புடையீர்! வணக்கம்.

'சிந்தனையாளன்' சனவரி 2019 இதழ் கண்டேன். "நம் குறிக்கோள்! உண்மையான இந்தியக் கூட்டாட்சி! மேலும் ஒரு விளக்கம்" ஆசிரியவுரை அருமையிலும் அருமை. "நான் பங்கேற்கும் கடைசி மலர் வெளியீடாக 2019 பொங்கல் மலர் இருக்கலாம்" என்னும் வரிகளைப் படித்த போது நெஞ்சம் கனத்தது; கண்கள் பனித்தன. தாங்கள் நூறாண்டு வாழ்வீர்கள். நம்பிக்கையோடு இருங்கள். திசம்பர் 23 அன்று கருஞ்சட்டைப் பேரணி தமிழின உரிமை மீட்பு மாநாடு மற்றும் பெரியாரின் கருஞ்சட்டைத் தோழர்களின் எழுச்சி ஆகிய கட்டுரைகள் நிகழ்ச்சியில் நேரில் கலந்து கொண்ட உணர்வை ஏற்படுத்தின. 'தாய்மொழி வழி அரசுப் பள்ளிகள் மூடல் இந்திய இனங்களுக்கு ஓர் அச்சுறுத்தல்' க. முகிலன் அவர்களின் எழுத்தோவியம் அதி அற்புதம். தங்களின் தன்னலமற்ற அறிவியக்கத் தொண்டுகள் தொடரட்டும். வாழ்த்துகள்.

- தங்க. சங்கரபாண்டியன், ஆதம்பாக்கம்

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில், சென்னை, மேற்கு மாம்பலம்
**ஆ,சந்திரசேகர் திருமண மண்டபத்தில்**, 6.1.2019 ஞாயிறு காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை,

## "சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2019 வெளியீட்டு விழா",
## "மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு", "தமிழ் வழிக் கல்வி மாநாடு"

ஆகிய முப்பெரும் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

# இம்மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

**தீர்மானம் 1 :**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி**, தமிழ் காப்புப் போராளி அறிஞர் **கி.த. பச்சையப்பன்**, தமிழிலும் ஆங்கிலத்திலும் திறமை சான்ற அறிஞரான **புதுவை இலெனின் தங்கப்பா**, காட்டுமன்னார்கோவில் தில்லைவனம் அவர்களின் துணைவியார் **தி. தில்லைநாயகி** ஆகியோரின் மறைவுக்கு இம்மாநாடு ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

**தீர்மானம் 2 :**

இந்து மத ஆதிக்கத்தை நிலைநாட்டும் நோக்கத்துடன் இந்தியாவை ஆளும் பாரதிய சனதாக் கட்சி அரசு, இந்த 2019ஆம் ஆண்டு தொடக்கத்தில், அயோத்தியில் இராமன் கோயிலைக் கட்ட வேண்டும் என, இராஷ்ட்ரிய சேவக் சங்கமும் (RSS), விசுவ இந்து பரிசத்தும், மற்ற சங் பரிவாங்களும், பாரதிய சனதா அமைச்சர்களும் இடைவிடாது பரப்புரை செய்வதை மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

**தீர்மானம் 2(அ) :**

தீர்மானம் 2-இல் கண்ட, இந்து ஏகாதிபத்திய வாதிகளின் முயற்சிகளை முறியடிக்கும் வகையில் - தமிழகம் முழுவதிலும் உள்ள பெரியாரிய உணர்வாளர்களும், அம்பேத்கரிய உணர்வாளர்களும், பகுத்தறிவு இயக்கங்களும், தமிழ் காப்பு இயக்கங்களும் வேற்றுமை மறந்து ஒரு குடை அமைப்பின்கீழ் ஒன்றிணைந்து, மண்டல வாரியாகப் பேரணிகள், மாவட்ட வாரியாக ஆர்ப்பாட்டங்கள் எனத் தொடர்ச்சியாக நடத்தி மத ஆதிக்கத்தை முறியடிக்க வேண்டும் என எல்லாப் பெரியாரிய - அம்பேத்கரிய - தமிழ் அமைப்புகளையும் இம் மாநாடு வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 3 :**

"கீழ்க் கோர்ட்டு நீதிபதி பதவிக்கு அகில இந்திய அளவில் ஒன்றியக் குடிமைப் பணித் தேர்வாணையம் (UPSC) மூலம் தேர்வு நடத்த நிதி ஆயோக் பரிந்துரை செய்துள்ளது" என்கிற செய்தி, 21-12-2018 அன்று, எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது. அப்படி உள்ள பதவிகள் இந்தியா முழுவதிலும் உள்ள ஏறக்குறைய 650 மாவட்ட நீதிபதிகள், மற்றும் மத்திய - மாநில அரசு வழக்குரைஞர்கள், சட்ட ஆலோசகர்கள், சட்ட வரைவாளர்கள் ஆகிய பல ஆயிரம் பதவிகளுக்குத் தேர்வு செய்வது ஆகும். அப்போது, எல்லா மதங்களையும் சார்ந்த பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகிய 27+15+7 = 49 விழுக்காடு இடங்களுக்கு இடஒதுக்கீடு தருவது ஒழிக்கப்பட்டுவிடும். இதுவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு - பாரதிய சனதா அரசு எடுத்துள்ள முடிவு ஆகும். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு எதிரான இந்த முடிவை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

**தீர்மானம் 4 :**

தமிழ் மாநிலம் 1.11.1956-இல் தனி மாநிலமாக அமைந்தது. அன்று முதல் 5.3.1967 வரை காங்கிரசுக் கட்சி ஆண்டது. 6.3.1967 முதல் 31.12.2018 வரை - 51 ஆண்டுகளாகத் திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மாறி மாறி ஆட்சி புரிந்தன.

திராவிடக் கட்சிகள் இந்த அரை நூற்றாண்டுக் கால ஆட்சியில் பள்ளிக் கல்வி முதல் உயர்நிலைப் பல்கலைப் படிப்புகள் எல்லாவற்றையும் தமிழ் வழியில் கற்பிக்க ஏற்பாடு செய்யவில்லை. ஆங்கில வழியில் கற்பிக்கும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளையும், கல்லூரிகளையும், நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களையும் கைக்கூலிகளாக நிரம்பத் தொடங்க ஒப்புதல் அளித்தன. இது வருத்தத்திற்குரியது.

மேலும், 1956-இல் நிறைவேற்றப்பட்டபடி - தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் 5.1.2019 வரையில், தலைமைச் செயலகம் முதல் ஊராட்சி வரையில் எல்லா அரசு அலுவலகங்களிலும் அன்றாட நடவடிக்கைகளில் தமிழ் ஆட்சிமொழியாக

நடவடிக்கைக்கு வரவில்லை. இது கடும் கண்டனத் துக்கு உரியதாகும் எனத் தமிழ்வழிக் கல்வி மாநாடு தீர்மானிக்கிறது.

**தீர்மானம் 5 :**

1939 முதல் சென்னை மாகாணத்தில் தமிழ்நாட் டில் அரசு தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் எல்லாப் பாடங்களும் தமிழ்மொழி வழியில் கற்பிக்கப்பட்டன; ஆங்கிலம் தேர்வுக்குரிய ஒரு பாடமாக மட்டும் கற்பிக்கப் பட்டது. கல்லூரிகளில் எல்லாப் பாடங்களும் ஆங்கில வழியில் கற்பிக்கப்பட்டன.

1965-க்குப் பிறகு அரசு உயர்நிலைப்பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு முதல், வேண்டுமானால், ஒரு பிரிவு (Section) ஆங்கில வழியில் கற்பிக்கப்பட்டது. 6.3.1967-இல் திமுக ஆட்சிக்கு வந்தது. திமுக ஆட்சியில் 1971 முதல் தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மளமளவெனத் தொடங்கப்பட்டன; எல்லா மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது; மற்ற எல்லாப் பாடங்களும் ஆங்கில வழியில் கற்பிக்கப்பட்டன. கல்லூரிகளிலும் அறிவியல், கணக்குப் பாடங்கள் ஆங்கில வழியில் மட்டுமே கற்பிக்கப்பட்டன. பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம் முதலான தொழில் படிப்புகள் ஆங்கில வழியிலேயே கற்பிக்கப்படுகின்றன.

எந்த மேலை நாட்டிலும் தாய்மொழியில் தவிர வேறு எந்தப் பிறமொழியிலும் எந்த வகுப்புக்கும் எந்தப் பாடமும் கற்பிக்கப்படவில்லை. அதனால் தான் மேலை நாட்டார் எல்லாத் துறைகளிலும் முன்னேறி இருக்கிறார்கள்; நாம் பல துறைகளில் பின்தங்கி மானிட வளர்ச்சி வரிசையில் 137ஆவது இடட்தில் இருக்கிறோம். இது ஈன நிலை ஆகும்.

இந்த ஈன நிலையில், 2016-17ஆம் கல்வி ஆண்டு முதல், அதிமுக அரசு தொடக்கப் பள்ளியிலேயே ஆங்கில வழிக் கல்வியைப் புகுத்திவிட்டது. மேலும், 2019-20ஆம் கல்வியாண்டில் மழலையர் 55,000 பேருக்கு ஆங்கிலவழிக் கல்வி தர முயற்சிக்கிறது. இது, கடும் கண்டனத்துக்கு உரியது. எனவே, **தமிழ்வழிக் கல்வியே வேண்டும்** என்போர் எல்லோரும் ஒன்று திரண்டு, தமிழக அரசின் தமிழ் அழிப்புக் கொள்கையை அடியோடு தகர்க்க முன்வரவேண்டும் என தமிழ் இத் தமிழ்வழிக் கல்வி மாநாடு அனைவரையும் வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 6 :**

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் முழுத் தன்னாட்சி (Full Autonomy) உள்ள மாநிலம் என்ற தகுதியுடன், 1955-இல் ஜம்மு - காஷ்மீர் அரசமைப்பை இந்திய அரசு ஏற்றது. ஆனால், பிரதமர் பண்டித நேரு 1954-இல் இயற்றப்பட்ட காஷ்மீர் அரசமைப்பு விதி 35-A, இந்திய அமைப்பின் விதி 370-இல் சொல்லப்பட்ட காஷ்மீர் அரசமைப்பு 238ஆம் விதி இவற்றைத் தவிர மற்றெல்லாத் தன்னுரிமை விதிகளையும் ஜம்மு - காஷ்மீர் அரசமைப்பிலிருந்து 1962-க்குள் திருட்டிவிட்டார்.

இப்போது, பாரதிய சனதா அரசின் பிரதமர் நரேந்திர மோடி, விதி 35-A, விதி 238 ஆகிய இரண் டையும் நீக்கிவிடத் திட்டமிடுகிறார். இதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிது.

அத்துடன் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் மீது, இராணுவ ஆட்சியை ஏவுவதைக் கைவிட்டு, அம் மாநிலத்துக்கும் மற்ற மாநிலங்களுக்கும் முழுத் தன்னாட்சி உரிமையை அளிக்க முன்வர வேண்டும் என, இம்மாநாடு இந்திய அரசைக் கோருகிறது.

06-01-2019 **- வே. ஆனைமுத்து**

## தமிழ்மொழியைப் பற்றி காந்தியார்!

தமிழ்மொழிப் பயிற்சியைப் பற்றி நான் ஒன்றுங் கூறியதில்லையென்று சிலர் என் மீது பழி சுமத்துவதாகக் கேள்வியுற்றேன். அப்பழி என்னை அணுகாது. என்னை நன்கறிந்தவர் என்மீது அப்பழி சுமத்த ஒருப்படமாட்டார். ஆங்கிலம் பயில்வதற்கு முன்னர் தமிழ்மொழி பயிலல் வேண்டுமென்று யான் பன்முறை பகர்ந்திருக்கிறேன். 1915ஆம் ஆண்டிலேயே ஆங்கிலத்தினும் தமிழ்மொழியைச் சிறப்பாகக் கொள்ளுமாறு தமிழ் மக்களை வேண்டிக் கொண்டேன். இன்றைக்குப் பத்தாண்டுகளுக்கு முன்னர் இந்தியா முழுவதும் சுற்றிச் சுற்றி அந்நிய மொழி வாயிலாகப் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டலாகாது என்று கிளர்ச்சி செய்தேன்; தாய்மொழி யில் பேசுமாறும், தாய்மொழி நூல்களைப் பயிலுமாறும் மக்களுக்கு விண்ணப்பஞ் செய்து கொண்டேன்.

அவரவர் அவரவர்க்குரிய தாய்மொழியிலேயே கல்வி பெறல் வேண்டும். தமிழ் மக்கள் தாங்கள் தாய் மொழியாகிய தமிழைப் பயில வேண்டுவது அவர்களது இன்றியமையாத கடமை. தமிழர் தம் மொழியை ஆங்கிலம் முதலிய மொழி களைவிட முதன்மையாகக் கருதல் வேண்டும். தமிழ்நாட்டில் ஓரிடத்தில் எனக்கு ஆங்கிலத்தில் வரவேற்பறிக்கை வழங்கப் பட்டது. அதை உடனே யான் மறுத்துரைத்ததை நீங்கள் அறிந்திருக்கலாம். எனது மனோநிலை உணராது அடாத பழி இனி என்மீது சுமத்தமாட்டீர்கள் என நம்புகிறேன்.

(நூல் : மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பக்.144-145)

படம்

படம்

படம்

படம்

படம்

படம்

படம்

படம்

# உழவனின் உள்ளம் எப்படியெல்லாம் நலிவுறும்? தீர்வு என்ன?

இரா. பச்சமலை

தமிழ்ப் புத்தாண்டு, தைப் பொங்கல் மலர்கிறது மகிழ்ச்சியுடன். தன் வீட்டுக் கொல்லையில் மாமரம் பூ பூக்கத் தொடங்கியதைக் கவனியாதிருந்துவிட்டு தற்செயலாகத் தோட்டம் பக்கம் சென்றவன் பூத்துக் குலுங்கிய மாமரத்தைக் கண்டு எல்லையில்லாக் கொள்ளை இன்பம் கொள்கிறான்; அது மிக உயர்ந்த வகை சப்போட்டா (விருதுநகர் மாவட்டம், சேத்தூர், இராசபாளையம் பகுதியைச் சேர்ந்த வகை மா). இரண்டு நாள் கழித்துத் தோட்டம் பக்கம் செல்கிறான், மகிழ்ச்சி கருகி மனம் கலங்க மா இலைகள் அங்கங்கு காய்ந்து கருகிக் கொண்டிருப்பதைப் பார்த்து மாம் பூக்கொத்துக்கள் பக்கம் நெருங்கிச் சென்று உற்றுப் பார்க்கிறான். அய்யகோ! பூக்களும் கருகி அதில் புழுக்கள் நெளிந்து கொண்டிருப்பதைப் பார்த்து துணுக்குற்றான். அந்தக் காய்ந்து கருகிய இலைக் கொம்புகளை, பூக்கொத்துக்களை அவசர, அவசரமாக ஆனால் உற்ற கவனத்துடன் பூக்கள் உதிர்ந்துவிடக் கூடாது என்ற கவலையுடனும் பூப் போன்று பிடுங்கி அகற்றுகிறான். எல்லா வற்றையும் நீக்கிட முயன்று கைக்கெட்டிய அளவுக்கு முயன்று முடிந்த வரை கருகிய பகுதிகளை நீக்கிவிடுகின்றான். கடைசி யில் பார்த்தால் அதிலொரு புழு நெளிந்து தன் கையிலேயே ஊறிவிடுகின்றதைப் பார்த்து சற்று அருவெறுப்படைந்து அதனைக் கொன்று விடுகின்றான். ஆனால் மரம் முழுவதும் எங்கெங்கு புழுக்கள் உள்ளனவோ அவை மாம் பூக்களுக்குப் பெரும் தீங்கல்லவா விளைவித்துவிடும் எனப் பதறி அவற்றை எவ்வாறு அழிப்பது, எப்படி மாம் பூக்களைக் காப்பது என்ற சிதைந்த சிந்தனையுடன் வீட்டிற்குள் நுழைகிறான்.

தன் துணைவியாரிடம் புலம்புகின்றான். வேளாண் துறையை நாடலாம் என்ற எண்ணமே துளிர்க்கவில்லை. ஆனால் அவன் தம்பி இயற்கை வேளாண் தொடர்பாகச் சொன்னவை நினைவுக்கு வந்தவனாக வேப்பிலையை அரைத்து கரைசலாக மாமரத்தில் தெளித்துப் பூக்களைக் காப்பாற்றிவிடலாம் என்ற மகிழ்ச்சி பொங்கச் சொன்னாள். அவரும் தன் தம்பியும் இதுகுறித்து சொல்லியுள்ளான் என்று மஞ்சள் பொடியையும் கரைசலுடன் கலந்து தெளித்தால் இன்னும் நல்லது என்றார்.

சரி தீர்வு கண்டுபிட்டோம். தொல்லை ஒழியும் என்ற மனத் துள்ளலுடன் மறுநாள் காலையிலேயே வேப்பிலை அரைத்த கரைசலுடன் மஞ்சள் பொடியையும் கலந்து எடுத்துச் சென்று மொட்டை மாடி வரை வளர்ந்து கவிழ்ந்து நிற்கும் அந்த மாமரத்தில் நிறை மனதுடன் அதைப் பரவலாகத் தெளித்தான். குறிப்பாகப் பூக் கொத்துக்களைக் குறிவைத்துக் கரைசலைச் செழிப்பாகத் தெளித்தான். அந்தப் பணியை அப்படியே அச்சுப் பிறழாமல் மறுநாளும் செய்து முடித்தான். ஆனால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை என்பதை உணர்ந் தான். அதாவது பூக்கள் கருகுவது அறவே நின்றுவிடவில்லை என்பது பூக்களை உற்றுப்பார்த்த போது தெரிந்தது. பரவா யில்லை, மூன்றாம் நாள் முயற்சிக்கலாமென்று மனதைத் தேற்றிக் கொண்டான். அதேபோல் மூன்றாம் நாளும் மும்முரமாக அப்பணியை மேற்கொண்டான். நான்காம் நாளும் வந்தது. இன்னலுக்குத் தீர்வு கிடைத்துவிட்டது என்று எண்ண முடியாதவாறு காம்புகளின் நுனியில் இருந்த பூக் கொத்துக்கள் இன்னும் கருகிக் கொண்டிருப்பதைப் பார்த்து மனம் துணுக்குற்றான். அன்று கரைசல் தெளிக்காமல் விட்டுவிட்டான். மாற்றுவழி என்ன? மருகினான்.

திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. முன்பொருமுறை அவன் துணைவியார் சொன்னது நினைவுக்கு வந்தது. அதாவது காலக்கெடு தாண்டி கெட்டிருந்த கோ-கோலாவை செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றும் போது கலந்து ஊற்றிவிட்டு மறுநாள் பார்த்தால் பூச்செடிகளிலிருந்த புழுக்கள் மடிந்து கிடந்ததைக் கண்டதையும். அதனால் கோ-கோலா நல்ல பூச்சிக் கொல்லி மருந்தாக உள்ளது என்று சொன்னாள். அவ்வாறே ஐந்தாம் நாள் ரூ.38 விலையுள்ள கோ-கோலாவை வாங்கி வந்து தண்ணீரில் கலந்து மாமரத்தில் பரவலாக மரத்தின் எல்லாப் பகுதிகளிலும் படுமாறும், குறிப்பாகப் பூக்கொத்துக்களில் படுமாறும் மிகவும் சிரத்தை எடுத்துக் கொண்டு அந்தக் கரைசலைத் தெளித்து முடித்தான். நல்விளைவை வேண்டினான். மாமரத்தைப் பொறுத்தமட்டில் பொறுத்துத்தான் இருக்க வேண்டும்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார், வள்ளலார். அது உயிர்கள் மேல் அவர் கொண்டிருந்த அளவற்ற பற்றின் வெளிப்பாடு. துறவியான அவரின் உணர்வு இத்தன்மையதெனில் பல ஏக்கரில் தம் வாழ்வுக்காகத் தாம் பாடுபட்டுப் பயிரிட்ட பயிர்கள் கருகிடக் காணும் உழவர்களின் உள்ள வாட்டம், பதறல்களை என்னென்று சொல்வது? ஒரு மாமரம் பராமரிக்கப்படாத நிலையில் அதினின்று கிட்டும் பலன் தனக்குக் கிடைக்காது போகும் என வருந்தும் ஒரு வனின் நிலை இது எனில், அரும்பாடுபட்டு உழைத்துச் சாகுபடி செய்த உழவனின் பயிர்கள் வாடிடக் காணும் அவன் மனம் என்ன பாடுபடும்? அவன் உழைப்பின் பலன் பரந்துபட்ட மக்களுக்கானது என்ற எண்ணமே வேளாண் அறிவியலாளர்கள் வல்லுநர்களிடம் இருப்பதுடன் விளைவிக்கும் உழவனின் உரிய வாழ்வே மறுக்கப்படுவது பற்றி கிஞ்சித்தும் கரிசனமோ, கவலையோ அல்லாதவர்களாக அல்லவா உள்ளனர். பின் பொதுநிலை பொருளியல் வல்லுநர் எவரும் கவலை கொண்டு உழவனின் உய்வுக்கு எப்படிச் சிந்திப்பார். இதுதான் கயமையின் உச்சம். இந்நிலை சற்றேனும் அற்றுப் போகவேண்டுமெனில் வேளாண் விளைபொருள்கள்களுக்கு உரிய, உயரிய கொள்முதல் விலை நிர்ணயிப்பதுடன் நில்லாது அவ்விலை கொடுத்து உரிய காலத்தில் உழவர்களிடமிருந்து விளைபொருட் களையெல்லாம் கொள்முதல் செய்திட ஆவனவெல்லாம் செய்ய வேண்டுவது முதன்மையானதாகும்.



# வள்ளலார் ஆய்வாளர் பொன். இளங்கோவன் துணைவியார் இ. இசைமணி அவர்கள்
## *மறைந்தார்!*

ஓய்வுபெற்ற இளநிலைக் கல்வி அதிகாரியும், அரியலூர் பக்கத்தில் உள்ள இலிங்கத் தடிமேட்டில் வள்ளலார் கல்வி நிலையத்தில் பெரிய குயப்பள்ளம் கோ. குழந்தைவேல னுடன் இணைந்து கொ.இரா. விசுவநாதன் நடத்திய பள்ளிக் கூடத்தில் 1957 முதல் 1968 வரை பணியாற்றினார், பொன். இளங்கோவன்.

இலிங்கத்தடிமேடு நிறுவனம் நிறுவப்பட, கொ.இரா. விசுவநாதனுக்கு உற்ற துணையாகக் குழந்தைவேலன் இருந்தார்; குழந்தை வேலனின் மூத்த துணைவியார் வள்ளியம்மை, இசைமணியை ஈன்றெடுத்து மறைந்தார்.

கல்வித் தகுதியில் பொன். இளங்கோவன், தன்னை உயர்த்திக் கொண்டார். குழந்தைவேலன் தன் மகள் இசை மணியை பொன். இளங்கோவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்.

பள்ளிக்கல்வி அலுவலர் பணியிலிருந்தபோது அவர் சில ஆண்டுகள் விருத்தாசலத்தில் சொந்த வீட்டில் குடியிருந்தார். நான் இயக்க வேலையாக அங்குச் சென்ற போது, இளங் கோவன் வீட்டில் சில தடவைகள் உணவு உண்டிருக்கிறேன். மறைந்த இசைமணி அம்மையாரையும் நன்கு அறிவேன். அவர் விருந்தினர்களை அன்போடு ஓம்புபவர்.

கோ. குழந்தைவேலன், வள்ளியம்மை மறைவுக்குப் பிறகு, பொன். இளங்கோவன் தமக்கையார் இன்பவடிவியை இரண்டாவது மணம் செய்து கொண்டார். குழந்தைவேலன் - இன்பவடிவி ஆகியோரின் மூத்த மகள் கு. ஔவை - க. ஆதி மூலம் ஆகியோரின் திருமணத்தை இடையக்குறிச்சியில் 1964 வாக்கில் நான் நடத்தி வைத்தேன்.

கோ. குழந்தைவேலனின் இரண்டாவது துணைவி யாருக்கு 5 மகள்கள், 2 மகன்கள்.

கோ. குழந்தைவேலன் அவர்கள் வே.ஆனைமுத்து வுடன் இணைந்து 8.8.1976-இல் பெரியார் சம உரிமைக் கழகம் நிறுவப்படக் காரணர் ஆக இருந்தார். 1994 வரை 18 ஆண்டுகள் மா.பெ.பொ.கட்சியின் தீவிர உறுப்பினராகச் செயல்பட்டார்.

குயப்பள்ளத்தில், 12.2.1994 அன்று, எதிர்பாராத வகையில் ஒரு நேர்ச்சியில் அடிபட்டு அந்த இடத்திலேயே மறைந்து விட்டார்.

மா.பெ.பொ.க. தோழர்கள் பல மாவட்டங்களிலிருந்தும் பலரும் அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

பொன். இளங்கோவன் ஓய்வு பெற்ற பின்னர் ஆவினங் குடியில் சொந்த வீடு வாங்கிக் அங்கு குடியிருக்கிறார்.

அவர் தந்தை பெரியார் நூல்கள், வள்ளலாரின் திரு அருட்பா இவற்றை ஆய்வு செய்வதில் நாட்டம் கொண்டவர். சில நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். 3 ஆண்டுகளுக்கு முன்னால் விருப்பத்தோடு, என்னிடம் கேட்டு, "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்" நூலைப் பெற்றுக் கொண்டார்.

பொன். இளங்கோவன் துணைவியார் இசைமணி, சில நாள்கள் நோய்வாய்ப்பட்டிருந்து, 15.01.2019 அன்று செவ் வாய்க்கிழமை பிற்பகல் தனது 77ஆம் வயதில் மறைவுற்றார் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்கிறோம்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் 16.01.2019 புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

இறுதி ஊர்வலத்தில் குழந்தைவேலன் இன்பவடிவி, பொன். இளங்கோவன், புலவர் பூ. பொய்யாமொழி - மங்கையர்க் கரசி மற்றும் குழந்தைவேலன்-இன்பவடிவியின் மக்களும் மருமக்களும், பொன். இளங்கோவன் மக்களும் மருமக் களும் பங்கேற்றார்கள்.

இசைமணி அம்மையாரின் நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்ச்சி திருவட்டத்துறையில் பொன். இளங்கோவன் இல் லத்தில் 27.1.2019 ஞாயிறு காலை 10 மணிக்குத் தொடங்கி நடைபெற்றது; இசைமணி அவர்களின் படம் திறந்து வைக் கப்பட்டது. அவருடைய பண்புகளை விளக்கிப் பலர் உரை யாற்றினர். படத்திறப்பை முன்னிட்டு, "சிந்தனையாளன்" வளர்ச்சி நிதியாக பொன். இளங்கோவன் ரூ.1,000/- வழங்கினார்.

தம் வாழ்க்கைத் துணைவியாரை இழந்து மனத் துன்பத்துக்கு ஆளாகி இருக்கும் பொன். இளங்கோவன் அவர்களுக்கும் அவர்தம் மக்களுக்கும், இசைமணியின் தாயார் இன்பவடிவி - குழந்தைவேலன் அவர்கட்கும், தம்பி கள் கு. தொல்காப்பியன், கு. மேழிச்செல்வன் மற்றும் தங்கை கள் உறவினர்கள் ஆகியோருக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**28.1.19** **- வே. ஆனைமுத்து**

## ஆளுநர் அவர்களே!
## 28 ஆண்டுகள் போதாதா?
## எப்போது எம் மக்களை விடுவிப்பீர்கள்?

# அற்புதம்மாள் நீதிகேட்டுப் போராட்டம்!

இராஜீவ் காந்தி கொலைக் குற்றம் சாட்டப்பட்ட பேரறிவாளன், முருகன், நளினி, சாந்தன், இரவிச்சந்திரன், ஜெயக்குமார், இராபர்ட் பயஸ் ஆகிய ஏழு பேரும் வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் வாடிவதங்குகிறார்கள்.

**அவர்கள் தாங்கள் சிறை புகுந்த நாளிலி ருந்து, தங்கள் தங்கள் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள் வதிலும், நன்னடத்தை மூலம் நல்ல பெயர் வாங்கு வதிலும் குறியாக இருக் கிறார்கள்.**

தில்லி உச்சநீதிமன்றம், ஓராண்டுக்கு முன், தமிழக ஆளுநர் அவர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, அவர் களை விடுதலை செய்ய ஆளுநருக்கு அதிகாரம் இருப்பதாகக் கூறிவிட்டது. அதன்படி தமிழக அரசும் ஆளுநருக்கு வேண்டு கோள் விடுத்துள்ளது. ஆனாலும் தமிழக ஆளுநர் அவர்கள் இந்த ஏழு பேரையும் இன்னும் விடுதலை செய்யவில்லை. இது சட்டத்திற்கும் நீதிக்கும் புறம்பானதாகும்.

வெள்ளையன் காலத்தில் கொலைக் குற்றவாளிகளுக்கு வாழ்நாள் தண்டனை விதிக்கப்பட்டால்-தண்டனை பெற்ற வர்கள் 14 ஆண்டுகள் சிறையில் இருந்த பிற்பாடு, அந்தக் குற்றவாளிகளின் நன்னடத்தை பற்றி ஒரு குழுவை அமைத்து ஆய்வு செய்வார்கள். அவர்கள் நன்னடத்தை உள்ளவர்களாக மாறியிருந்தால், அக்குற்றவாளிகளை 14 ஆண்டுகள் முடிந்த உடனே விடுதலை செய்வார்கள்.

**மன்மோகன் சிங் காலத்திய காங்கிரசு அரசாங்கமும், இன்றைய மோடி காலத்து பாரதிய சனதா அரசாங்கமும் 28 ஆண்டுகள் சிறையிலிருந்த இவர்களை விடுதலை செய்யாதது அநீதி ஆகும்.**

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, சிறையில் உள்ள பேரறிவாளன் தாயார் அற்புதம் அம்மாள் அவர்கள் நீதி கேட்டு, கோவையிலிருந்து 24.1.2019 வியாழன் அன்று பரப்புரைக்காகப் பயணம் புறப்பட்டுள்ளார்.

கோவையில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலை வர் கு. இராமக்கிருட்டிணன், வழக்குரைஞர் சிவக்குமார், எழுத்தாளர் பாமரன் ஆகியோர் அற்புதம் அம்மாளுக்கு ஊக்கமளித்து அந்தப் பயணத்தைத் தொடங்கி வைத்தனர்.

அற்புதம் அம்மாள் நீதி கேட்கும் பயணத்தை - திருப்பூர், ஈரோடு, சேலம், கிருட்டிணகிரி, விழுப்புரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, புதுச்சேரி முதலான இடங்களுக்குச் சென்று, எல்லா இடங்களிலும் பொது மக்களைக் கூட்டி நீதி கேட்டுப் பரப்புரைப் பயணம் செய்ய உள்ளார்.

செய்தி - "The Hindu", 25.1.2019

# பல கடவுள்கள் வணக்கம்

பல கடவுள்கள் வணக்கம், பொருளற்ற மூடச் சடங்கு போன்ற அறியாமை இருள் எழுகின்ற போ தெல்லாம் - புதிய ஒளி ஏற்றி சமுதாயத்தைச் சீர்திருத்த முனைந்த அருளாளர் பலரை வரலாறு நெடுகிலும் பார்க்க முடியும்.

| | |
|---|---|
| ஆபிரகாம் (ஒரு கடவுட் கோட்பாடு) | கி.மு.1850 |
| மோசசு (யூத மதம்) | கி.மு.1250 |
| கவுதம புத்தர் (புத்த மதம்) | கி.மு.563-483 |
| கன்பூசியசு (கன்பூசியம் - சீனம்) | கி.மு.551-479 |
| மகாவீரர் (சமணம்) | கி.மு.540-468 |
| ஏசு கிறித்து (கிறித்தவ மதம்) | கி.பி.4-30 |
| முகமது நபி (இசுலாம் மதம்) | கி.பி.570-632 |
| குருநானக் (சீக்கிய மதம்) | கி.பி.1469-1539 |
| இராமலிங்க அடிகளார் (சமரச சன்மார்க்கம்) | கி.பி.1823-1874 |
| தந்தை பெரியார் (சுயமரியாதை இயக்கம்) | கி.பி.1879-1973 |

கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை கொங்கு நாட்டில் சமண மதமே செல்வாக்கோடு திகழ்ந்தது.

எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்பே சைவ மதம் அறிமுகமாகி சமணம் வீழ்த்தப்பட்டது.

உடுமலை திருமூர்த்தி மலையிலுள்ள சமணர் கோவில், இன்ற அமணலிங்கேசுவரர் என இந்து மதக்கோயிலாக மாற்றப்பட்டுவிட்டது.

இப்படிப் பல வகைகளிலும் சமண மதச் செல்வாக்கையும் கோவில்களையும் சைவம் கவர்ந்து கொண்டது.

மதம் சாராக் குலதெய்வ வழிபாடுகளே இன்றும் தமிழ்நாட்டில் மிகுதி. இவற்றை இந்து மதப்பட்டியலில் இணைத்துப் பார்ப்பது இயலாது.

பிராமணப் பூசாரிகள் இக்கோவில்களில் இல்லை. பிராமணர்களோ, பிற மாநில இந்துக்களோ - இந்தக் கோவில்களை ஏரெடுத்தும் பார்ப்பதில்லை. இன்று வரையிலும் இதே நிலைதான் தொடர்கிறது.

(மதம், கடவுள், மனிதன் - வளர்ச்சி வரலாறு.
நூலாசிரியர் : செந்தலை **ந. கவுதமன்)**

# யார் தேசத் துரோகிகள்

- தந்தை பெரியார்

**29.12.1938 அன்று சென்னையில் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்ட பெரியாரின் தலைமை உரையின் ஒரு பகுதி.**

"நமக்குத் தேசீய உணர்ச்சியில்லையா? தேசிய என்ற ஆரிய (வட) மொழிச் சொல்லுக்குச் சரியான ஆங்கில மொழிச்சொல் நேஷனல் () என்பதாகும். நேஷனல் என்ற சொல்லுக்கு ஜாதியம் என்பதுதான் சரியான கருத்து எனக் கற்றோர் கூறுகின்றனர். அக ராதியும் சொல்லுகிறது.

ஐரோப்பாக் கண்டம் என்ற ஒரு பூபாகத்தில் ஜெர்மனி நேஷன் வேறு; இட்டலி நேஷன் வேறு. ஐரோப்பிய மகாயுத்தத்திற்கு முன்பு போலிஷ் ஜனங்கள் தனி நாடின்றி ருஷிய, ஆஸ்திரிய, பிரஷிய ஆதிக்கங்களுக்குட் பட்டிருந்தும் தங்களை ஒரு நேஷன் என்று சொல்லி வந்தனர். யூதர்களுக்கெனத் தனிப்பட்ட நாடொன்று தற்போது இல்லாவிடினும் யூதர்களும் ஒரு நேஷனே.

மேலே காட்டியபடி நேஷன் என்ற வார்த்தைக்கும் பொருள் கொண்டு பார்த்தால் இந்தியாவை ஒரு நேஷன் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? மொழிகளை அடிப்படையாக வைத்துப் பிரித்தால் இந்தியாவை அநேக நேஷன்களாகப் பிரிக்கலாம். அல்லது அங்கமச்ச அடையாளத்தின் மீது பாகுபாடு செய்தாலும் ஆரியர்கள், திராவிடர்கள், மங்கோலியர்கள் எனப் பல (நேஷன்) பிரிவுகளாகும். பழக்கவழக்க சமுதாயக் கோட்பாடுகளைக் கொண்டு பிரித்தாலும், அதுவும் பார்ப்பனர், பார்ப் பனரல்லாத இந்துக்கள் எனப் பல ஜாதி வகுப்புக்களாகப் பிரிக்கப்படும். மற்றும் எவ்வகையில் பார்த்தாலும் இந்திய நேஷன் என்பதற்கு இந்தியா முழுமையும் சேர்ந்த நிலப்பரப்பு மாத்திரம் என எவ்வாறு பொருள்படும்?

ஆந்திர தேசீயவாதிகள் சென்னை மாகாணத்தை விட்டுப் பிரிந்து தனி மாகாணமொன்று ஏற்படுத்தி அதன் நிர்வாகத்தைத் தாங்களே மேற்கொள்ள வேண்டுமென்று முயற்சிக்கின்றனர். அவ்வாறே ஒரிசாவும், சிந்துவும் தனித்தனி மாகாணமாய்விட்டன. பர்மாக்காரர்கள் இந்தியாவிலிருந்து பிரிந்து பர்மா பர்மியருக்கே என்று தீவிர கிளர்ச்சி செய்து வெற்றி பெற்றது நாம் அறிந்ததே. இலங்கைக்காரர்களும் இப்படியே. மற்றொரு வகையில் வடமேற்கெல்லை முஸ்லீம்கள் இந்துக்களிடமிருந்து பிரிந்து கொண்டார்கள். இப்படியே ஒரே மதத்தினரும், ஜாதியினரும் கூடத் தனித்தனி பிரிந்துபோக ஆசைப் படும்போது, இந்திய தேசிய சங்கம் என்னும் காங்கிரஸும் இதை அனுமதிக்கும்போது, தேசியம், தேசியம் என்று பறையறைவதின் அர்த்தந்தான் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. வங்காளிகளிடமிருந்தும், குஜராத்தி களிடமிரந்தும், காஷ்மீரிகளிடமிருந்தும், சிந்திகளிட மிருந்தும், தமிழ்நாட்டினர், ஆந்திர நாட்டினர், மலை யாள கன்னட நாட்டவர் பிரிந்து போக வேண்டுமென்று எண்ணுவது தேசியத்திற்கு விரோதமா? அதேபோல் ஆரியர்களிடமிருந்தும் மங்கோலியர்களிடமிருந்தும், திராவிடர்கள் பிரிந்துபோக நினைப்பது தேசீயத்திற்கு விரோதமாகுமா? வெள்ளையர் ஆட்சியின்கீழ் இல்லாவிட்டால் அந்நியர் படையெடுப்பினின்று நம்மைக் காத்துக் கொள்ள முடியாதெனக் கூறப்படுமானால் சிலோன், பர்மா இவைகளைப் போலவோ அன்றி கனடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா இவைகளைப் போன்றோ தமிழ்நாடோ திராவிட நாடோ பிரிந்திருக்கலா மல்லவா? வெள்ளையர் ஆட்சியின் கீழேயே இருக்க லாகாது; பூரண சுதந்தரம் பெற்ற தேசமாக இருக்கலாம் எனப்படுமானால் ஐரோப்பாவில் 3 கோடி 4 கோடி ஜனத்தொகை கொண்ட பெல்ஜியம், ஹாலண்டு, ஸ்விட்ஸர்லாண்டு, டென்மார்க் போல சென்னை மாகா ணமோ, தமிழ்நாடோ தனித்த நாடாக இருப்பது அசாத்தியமா?

அப்படிக்கின்றி இந்திய தேசிய சபையின் சர்வாதிகாரி குஜராத்தி நேஷனைச் சேர்ந்தவர்; பெருந்தலைவர் களிலே ஒருவர் காஷ்மீரி நேஷனைச் சேர்ந்தவர்; மற்றொருவர் வங்காளி நேஷனைச் சேர்ந்தவர். நிர்வாக சபையினர் அனைவரும் தமிழர்களோ, தமிழ் நாட்டினரோ அல்லாமல் இதரர்களாயிருந்துகொண்டு தேசீயம் பேசுவதென்றால் காங்கிரஸ் உண்மையில் எவ்வாறு தேசிய சபையாகும்? அன்றியும் இந்தியா முழுவதும் ஒரே நாடு என்றுதான் எவ்வாறு சொல்வது? அவ்வாறு கூறுவதற்குப் பூகோளப் படம் தவிர வேறு என்ன ஆதாரமிருக்கிறது? ஐரோப்பிய பூகோளப் படத்தைப் போலவே இந்தியப் பூகோளப் படமும் வருடத்திற்கு ஒருமுறையில்லாவிட்டாலும் அடிக்கடி திருத்தப்படுவதை நாம் பார்க்கிறோம். இரண்டு ஜில் லாக்கள் ஒரு ஜில்லாவாகின்றன; பெரியமாகாணங்கள் சிறியனவாகவும், சிறியன பெரியனவாகவும், மாற்றிய மைக்கப்படுகின்றன. சென்னைக்காரனும் வங்காளியும் சுரண்டுவதை பர்மாக்காரன் பொறுக்க முடியாமல் துடிக்கிறான். தென்னாட்டான் சுரண்டுவதைப் பொறுக்க மாட்டாமல் சிங்களத்தான் சீறுகிறான். குஜராத்தி சுரண்ட லும் இந்து மார்வாடி சுரண்டலும் தமிழ்நாட்டைப் பாப் பராக்குகிறது. இதற்கு நாம் துடிதுடித்தால் தேசியத்திற்கு

விரோதமாய் விடுகிறது! திராவிட மக்கள் (தமிழ் மக்கள்) மீது ஆரிய மதம் சுமத்தப்பட்டு அத்தமிழர் உழைப்பின் பலனையெல்லாம் தமிழரல்லாத ஒரு சிறு கூட்டத்த வர்கள் பகற்கொள்ளை போல் சுரண்டுவதை, உறிஞ்சு வதை, இது நீதியா, முறையா, அடுக்குமா என்று கேட்கப் புகுந்தால் அது தேசிய துரோகமாவதுடன் ராஜதுவேஷ மும், வகுப்புத் துவேஷமுமாகி விடுகிறது. இம்மாதிரி தேசீய வேஷம் போட்டு நாம் அழிந்து போவதா? அல்லது அதைக் கண்டு பயந்து தற்கொலை செய்து கொள்வதா? தோழர்களே! ஆழ்ந்து யோசியுங்கள்.

உலக ஒற்றுமையை நான் வெறுப்பவனல்ல. உலக மக்கள் சமதர்ம வாழ்வை மேற்கொள்வதை வேண்டா மென்று கூறவில்லை. மக்கள் யாவரும் விகிதாசாரம் உழைத்து அவ்வுழைப்பின் பலனை விகிதாசாரம் பகிர்ந்து, தத்தம் தகுதிக்கும் தேவைக்கும் அவசியமான அளவு அனுபவிப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தேசீயம் என்றும், தேச சேவையென்றும், தேச பக்தி என்றும், தேச விடுதலை என்றும், தேச ஒற்றுமை என்றும், ஆத்மார்த்தம் என்றும், பிராப்தம் என்றும் பல பல சொற்களைக் காட்டி மெய்வருந்திப் பாடுபட்டுப் பொருளீட்டும் பொது மக்களை, கட்டின ஆடை கசங்காமல், மெய்யில் வெய்யில் படாமல் வாழ்க்கை நடத்தும் ஒரு சிறு கூட்டத்தார், வஞ்சித்து, ஏமாற்றி வயிறு வளர்ப்பதை, ஏன்? உழைப்பாளிகளைவிட அதிகச் சுகமான வாழ்வு வாழ்வதை அடியோடு ஒழிக்க வேண்டுமென்பதற்காகவே நான் இதைச் சொல்லுகிறேன். ஆகவே தேசியம் என்கின்ற பேச்சு ஆத்மார்த்த விஷயத்தில் மோக்ஷம் வாங்கித் தருவது என்ற கூற்றுக்குச் சரியான கருத்தைக் கொண்டதேயாகும்.

## மடல் பகுதி

அன்புடையீர்! வணக்கம்.

‘சிந்தனையாளன்’ திங்கள் இதழ் தவறாமல் கிடைத்து - படித்து பயன் அடைந்து வருகிறேன். மூத்தவர் பெரியவர் ஐயா ஆனைமுத்து - இதழாசிரியர் பல் லாண்டு நலமுடன் வாழ்ந்து சமூக சேவை மேலும் செய்திட இறைவன் அருள்புரிவாராக.

- து. பாலகிருஷ்ணன், அண்ணா நகர் (கிழக்கு)

## வளர்ச்சி நிதி

சோளிங்கபுரம் கோ. நக்கீரன் - இலட்சுமி ஆகி யோரின் இளைய மகள் செந்தமிழ்ச்செல்வி - இரவி இணையர்க்கு நிலவன் என்று பெயரிடப்பட்டுள்ள ஆண் குழந்தை பிறந்ததன் மகிழ்வாக சிந்தனை யாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000 அளித்தனர்.

## தன்மானத் தமிழ்ப்புலவர்
## தமிழ்மறவர் வை.பொன்னம்பலனார்
## 116ஆம் பிறந்தநாள்
## (30.1.1904 - 2.12.1971)

தமிழும் தமிழினமும் இன்று பெற்றுள்ள
எழுச்சிக்கான வேர்களைத்
தேடிச்செல்வோர்
கண்டடையும் பெயர்களில் ஒன்று -
தமிழ்மறவர் புலவர் வை.
பொன்னம்பலனார் என்பது!



மறைமலை மாணடிகள்
மாண்பார் தமிழும்
நிறைபெரி யாரின்
நிமிர்வும் - மறலியெனும்
தென்னன் திடமும்
திணிந்தான் புலவோருள்
பொன்னம் பலமே
புகல்

-மொழிப்பேரறிஞர் ஞா.தேவநேயப் பாவாணர் ‘ஐந்தகம்’ எனும் புதுமுறை இலக்கியத்தால் பொன்னம்பலனாரை இப்படிப் புகழ்வார். மறைமலையடிகளார், தந்தைபெரியார் இருவரும் இணைந்து எழுந்த உருவமே புலவர் பொன்னம்பலனார் என்பது பாவாணர் கருத்து.

எப்போதும் கருஞ்சட்டையோடு காட்சிதரும் அவர், கனகசபை எனப் பெற்றோர் இட்ட பெயரைப் பொன்னம் பலம் எனத் தமிழாக்கிக்கொண்டார்.

தந்தைபெரியார் சேலத்தில் விழா எடுத்துப் பொன்னம்பல னாருக்கும் பாவாணருக்கும் பொற்கிழி வழங்கிப் பாராட்டினார். ’தமிழ் மறவர்’ பட்டம் அப்போது(28.7.1957) தரப்பட்டதுதான்!

அறிஞர் வே.ஆனைமுத்து,
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
சிலம்பொலிசெல்லப்பனார்
செம்மொழி க.இராமசாமி -
முதலிய பலநூறு புரட்சிமலர்களைப்
பூக்க வைத்த தாய்மரம்
புலவர் வை.பொன்னம்பலனார் !

’கனியிடை ஏறிய ருசியும்’ என வடமொழி கலந்து எழுதியிருந்தார் பாவேந்தர்.

"ஆரிய எதிர்ப்பை மொழியிலும்
காட்ட வேண்டும் "

எனப் புலவர் பொன்னம்பலனார் எடுத்துச் சொன்ன பிறகே , தனது பாடல் வரியை

’கனியிடை ஏறிய சுவையும்’

என்று மாற்றியமைத்தார் பாவேந்தர்.

தன்னைத் தனித்தமிழ் வழியில் நடைபோட வைத்தவர் புலவர் வை. பொன்னம்பலனாரே எனப் பாட்டால் போற்றியுள்ளார் பாவேந்தர். அவர் நினைவைத் தொடர்ந்து எழுப்புவோம் - தமிழினம் எழுவதற்காக!

# குதிரை பேரம்

பல காலமாக, பல நாடுகளில் மனிதர்கள் பொருள் களையும் வளர்ப்புப் பிராணிகளையும் மற்றவர்களுக்குக் கொடுத்து, தேவையான பொருள்களைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

1975 வரை கடைசியாகப் பண்டமாற்றுப் பொருள்களாக வேப்பங்கொட்டை, புளியங்கொட்டை, உப்பு, பழைய உடைந்த உலோகங்கள், காய்கறிகள், போன்றவை பண்ட மாற்ற முறையில் மாற்றப்பட்டன. 2010 வரை கிழிந்த துணிகள், பழைய பேப்பர்கள், உடைந்த உலோகங்கள், பிளாஸ்டிக் குகள் போன்றவை பண்ட மாற்றுப் பொருள்களாகவும் இருந்தன.

பணம் புழக்கத்திற்கு வந்த பிறகு வியாபாரம் பண்ட மாற்று முறையிலிருந்து முற்றிலுமாக விலகி, தரகு வேலை செய்யத் தொடங்கினர். வாங்கிய பொருள்கள் மீது தன்னுடைய இலாபத்தைச் சேர்த்து விற்க ஆரம்பித்தனர். இதுவே இப் பொழுது மக்களைச் சுரண்டும் தொழிலாக மாறிவிட்டது. எந்த வரியையும் வியாபாரி ஏற்பதில்லை. அனைத்து வரி களும் நுகர்வோரையே சார்ந்து விடுகின்றன. மக்களை ஏமாற்ற விதவிதமான விளம்பரங்கள்; பொய்யாகச் சொல்லி வியாபாரம் செய்கின்றனர். உற்பத்தி செய்பவருக்குக் கிடைக் காத இலாபம் தரகுகளுக்கு மட்டுமே கிடைக்கின்றது.

இன்றைய நவீன காலத்தில் மனித மூளையை விலைக்கு வாங்கி, தானே கண்டுபிடித்ததாக, எவரும் செய்ய முடியாதபடி ஒப்பந்தம் செய்து விற்கின்றனர். மனித விளை யாட்டுத் திறமைகளை ஏலம்விட்டு, ஏளனம் செய்யும் மனிதர் கள் இப்பொழுது அதிகம்.

அறிவியல் வாதிகளுக்குப் படிப்புத் தேவையில்லை; மனிதநேயம் தேவையில்லை. தில்லுமுல்லு ஒன்று வெற்றி பெற்றால் போதும். அதிக தொகைக்குக் (கோடிகள்) குதிரை பேரம் பேசி நல்ல ஆட்சியையும் கவிழ்த்து, கொள்ளையர்கள் இப்பொழுது ஆட்சி செய்து, சட்டசபை உறுப்பினர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குதிரை பேரம் பேசி விலைக்கு வாங்கி, மக்கள் பிரதிநிதி என்று சொல்லிக் கேவல மான ஆட்சி செய்யும் அரசுக்கு பெயர்தான் குதிரை பேர அரசியல்.

**- உழவர் மகன்**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - பிப்ரவரி-2019

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - பிப்ரவரி-2019

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**